நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

පුදිය පූමි

சுற்று 07 ஜன/பெப்ரவரி 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 33


## அதிகாரத்தின் கரங்கள்

அடக்குமுறை அதிகாரத்தை வலுப்படுத்தவே
புதைகுழிகளில் அத்திவாரம் இடப்படுகிறது.
புதை குழிகளின் எலும்புகள் வெளியேற்றப்படும் போது
அதிகார நிறுவனம் ஆட்டம் காணுகிறது.
பிணங்கள் கிடந்த குழிகளின் வெற்றிடம் விழுகின்ற அரசதிகாரத்தை
விழுங்க காத்திருக்கிறது.
எனவேதான்
புதைகுழிகள் மீளத் தோண்டப்படுவதை
அதிகாரத்தின் கரங்கள் மறிக்கின்றன.

நன்றி ~ வடலி

# பாராளுமன்ற அரசியல் சூதாட்டத்தில் மீண்டும் இனப்பிரச்சினைத் தீர்வு

ஜனாதிபதித் தேர்தலை பல்வேறு குறுக்கு வழிகளையும் பயன்படுத்தி வெற்றி கொண்ட அரசாங்கம் அடுத்த பாராளுமன்றத் தேர்தலை எதிர் நோக்கி நிற்கின்றது. இந் நிலையில் ஏற்கனவே நிறைவேற்றிக் கொள்ள முடியாத ஒன்றாக இருந்து வரும் இனப் பிரச்சினைத் தீர்வு என்ற விடயத்தை மீண்டும் கையில் தூக்கியுள்ளது. இது நேர்மையானதொரு முயற்சியா அல்லது கடந்த காலங்களைப் போன்று முதலாளித்துவப் பாராளுமன்ற அரசியல் சூதாட்டத்திற்கான மற்றோரு களம் திறக்கப்பட்டுள்ளதா? என்னும் கேள்வியை எழுப்பியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் பொதுசன முன்னணி அரசாங்கமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இனப் பிரச்சினைத் தீர்வு என்பதைத் தமது பாராளுமன்ற அரசியலுக்கான ஒரு சூதாட்டக் காயாகவே நகர்த்தி வந்துள்ளனர். அதனால் யுத்தம் முனைப்புப் பெற்றதே தவிர தீர்வு என்பது வெறும் பேச்சாகவே இருந்து வந்தது.

1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இன்றைய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைத்த போது நாட்டில் சிறு அளவாவது நம்பிக்கைத் துளிர்கள் காண-ப்பட்டன. ஜே.வி.பி. உட்-பட பேரினவாத சக்திகளின் கடும் எதிர்ப்பை எதிர் கொண்-டது. பின்பு அதில் வெட்டுக் கொத்துக்கள் இடம் பெற்று இறுதியில் எவ்விதக் கனம் காத்திரமற்ற வெற்றுப் பொதியாகிக் கொண்டது. அரசாங்கம் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாது பின்வாங்கிக் கொண்டது. அவ்வாறு பின்னுக்குச் சென்ற அரசாங்கம் இப்போது மீண்டும் தீர்வுத் திட்டத்தை புதிதாக வரைந்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பாராளுமன்றத்தில் அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடே முன் வைக்கப் போவதாக அறிவித்து அதற்குரிய செயலில் இறங்கியுள்ளதாகக் கூறி வருகின்றது. மேற்படி தீர்வுத் திட்டம் நான்கு கட்டங்களின் ஊடாக உருவம் பெறும் எனக் கூறப்படுகிறது. முதலாவது பொது சன முன்னணிக் கட்சிகள் மத்தியில் இணக்கம் காண்பது, இரண்டாவது ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்து பேசி உரிய திருத்தங்களை மேற்கொள்வது. மூன்றாவது தமிழ்க் கட்சிகள் உட்பட ஏனைய கட்சிகளுடன் இணங்கிக் கொள்வது. இறுதியாக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வுத் திட்டத்தை பூர்த்தி செய்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதாகும்.

**நேர்மையான முயற்சியா ? குறுகிய அரசியல் லாபமா ?**

மேற்படி அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் அறிவிப்பு கேட்பதற்கு மிக நன்றாகவே உள்ளது. இதனை ஆ..! ஊ... ! என்று வாழ்த்திக் கொள்பவர்களும் உள்ளனர். இப்படித் தான் கடந்த ஐந்து வருடங்களாக

8ம் பக்கம் பார்க்க...

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வில் தொழிற்சங்கங்களின் பாத்திரம் என்ன ?

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பற்றி தொழிற்சங்கத்தலைவர்கள் அறிக்கை விடத்தொடங்கியுள்ளனர். 1998 ஆம் ஆண்டு சம்பள உயர்வு கேட்டு நடத்தப்பட்ட போராட்டத்துக்கு என்ன நடந்தது என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஒரு நாள் சம்பளமாக 125 ரூபாவிற்கு குறைவாக பெறமாட்டோம் என்று கூறிய தலைவர்கள் 105 ரூபா கொடுத்தால் போதுமென்றனர். 105 ரூபா குறைவான எந்த சம்பளத்தையும் ஏற்க முடியாது என்றனர். இறுதியில் நாள் சம்பளமாக 95 ரூபாவும் ஆதாய அலவன்சாக 6 ரூபாமாகவும் ஒரு நாளைக்கு 101 ரூபா கிடைத்தால் போதுமென்று ஏற்றுக்கொண்டனர். அதனை ஏற்றுக்கொள்ளும்படி தொழிலா-ளர்களை வற்புறுத்தினர். ஆனால் அதிருப்தியடைந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் முடிவடைந்தது என்று அறிவிக்கப்பட்ட பின்னரும் சில நாட்கள் தொடர்ந்தும் வேலைக்கு திரும்பாமல் இருந்தனர்.

அப்போராட்டம் தொடங்-கியவுடன் இரண்டு ரூபாய் சம்பள உயர்வு கொடுத்தால் போதுமென்றும் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பும்படியும் ரூபவாகினி தொலைக்காட்சியில் தோன்றி மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரம் கேட்டுக் கொண்டார். இது அப்போராட்டத்தின் முதலாவது காட்டிக் கொடுப்பாகும் அடுத்தது இ.தொ.கா. தலைவர் தொண்டமானின் காட்டிக் கொடுப்பாகும். தோசை சுடும்போது அது கருகிவிடாமல் திருப்பிப் போடத் தெரிய வேண்டும் என்றொரு கதையையும் கூறி 101 ரூபாவை ஏற்றுக் கொள்ளும்படி தொழிலாளர்களையும் ஏனைய சிறிய தொழிற்சங்களையும் நிர்ப்பந்தித்தார்.

அப்போராட்டத்தின் பின்னர். நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தோட்டக் கம்பெனிகள் 1999 ஆம் ஆண்டின் இறுதியில் சம்பள உயர்வை மீள் பரிசீலனை செய்வதாக கூறியிருந்தன. எனவே அவ்வடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக மீண்டும் ஒரு போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்பது உணர்த்தப் படுகிறது. அப்போராட்டம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதை பற்றி மலையக தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் ஒரு கூட்டான நிகழ்ச்சி நிரலை ஏற்படுத்த வேண்டும்.

அதி வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற சூழ்நிலையில் தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அதனை சமாளிக்க ஏற்ற சம்பள உயர்வை முன்வைத்துப் போராட வேண்டியது அவசியம்.

தொழிற்சங்த் தலைவர்கள் வெறும் பத்திரிகை அறிக்கைகளுடன் மட்டும் தமது தோட்டங்களை வரையறுத்துக் கொள்ளாமல், எதிர்வரும் தேர்தலை மட்டும் குறிவைத்து செயற்படாமல் நேர்மையாக தகுந்த வழமுறைகளில் இறங்க வேண்டும். தோட்டக் கம்பனிகளும் அரசாங்கமும் இச் சம்பள உயர்வு விடயத்தில் மௌனமாக இருந்து வருகின்றனர். ஆனால் மலையகத் தலைவர்கள் தொழிற்சங்கங்கள் உறுதியான முடிவுகளுக்கு வரவேண்டியது. அவசியமாகும்.

●●●

# வடக்கு கிழக்கு தனி நாடாகிறது.

அரசாங்கமும் ராணுவமும் தனிநாடு உருவாக்கப்படுவதற்கு எதிராகப் போராடி வருவதாகக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் அவர்களே வடக்கு கிழக்கை தனி நாடாக்கி வரும் செயல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். ஏற்கனவே வடக்கில் குடாநாடும், வன்னிப்பிரதேசமும் தனி நாடு போன்றே ஆக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கும் வெளியில் இருந்து அங்கு போவதற்கும் வெளி நாடுகளுக்குச் செல்லும் நடைமுறைகளைக் கொண்டதாகவே ஆக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் இருந்து ஒருவர் வெளியே வருவதற்கு, பாஸ் அனுமதி பெறல் வேண்டும். அதே போன்று வன்னியில் வவுனியாவில் இருந்து வருவதானால் அதைப் போன்ற கஷ்டமும் வேதனையும் வேறு இருக்க முடியாது. இது ஐரோப்பாவிற்குள் அல்லது அமெரிக்காவிற்குள் நுளைவதைக் காட்டிலும் பல மடங்கு கட்டுப் பாடும் கஷ்டமும் அவலங்களும் நிறைந்தவையாகும். பாஸ் முறை என்பது ஏறத்தாள மற்றோரு நாட்டிற்குள் நுளைவதற்கான விசாவுக்குச் சமமானதாகும்.

தனி நாடு ஒன்று மற்ரொரு நாட்டினால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு அரச - ராணுவ நிர்வாகம் எப்படி நடாத்தப்படுமோ அவ்வாறே இன்று வடக்கு, வன்னி, வவுனியாவில் இருந்து வந்த நடைமுறை தற்போது மட்டக்களப்புக்கு விஸ்தரிக்கப்-பட்டுள்ளது. திருகோணமலைக்கும் அது கொண்டு வரப்பட உள்ளது. அரசாங்கத்தின் அறிவித்தலின் படி அம்பாறை மாவட்டம் தவிர்ந்த வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களும் பாஸ் விசா நடைமுறைக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. ஏற்கனவே அரசாங்க நிர்வாகங்கள் யாவும் வடக்குராணுவ மேலாதிக்கத்தால் நடாத்தப்படுகிறது. வடக்கு கிழக்கு ஆளுனர் கூட ராணுவ உயர் அதிகாரியாக இருந்தவரே நியமிக்கப் பட்டுள்ளார்.

எனவே வடக்கு கிழக்கு நாட்டின் தனித்தனிமையுடைய பிரதேசமும் மக்களும் கொண்ட பிரதேசம் என்பதை ஏற்றுக் கொண்டே அரசாங்கம் தனது நடைமுறைகளை செயல் படுத்துகிறது. அப்படியானால் ஏன் வடக்கு கிழக்கு இணைந்து பிரதேசத்திற்கு சுயாட்சி வழங்கவும் அதிகாரத்தை அப்பிரதேச மக்களுக்கு வழங்கவும் தயங்குகின்றது.

8ம் பக்கம் பார்க்க

## ஒரு எம். பி.க்கு 50 லட்சம்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசாங்கத்தின் பக்கம் தாவிச் செல்லத் தயாராக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு தலா 50 லட்சம் ரூபா பணமாகவும் வீடு. வாகனம் போன்றனவும் வழங்க ஏற்பாடு இருந்ததாக அறியமுடிகிறது. அதே வேளை தாவிச் செல்லாமல் இருப்பதற்கும் ஏறத்தாள அதே அளவு பணம் கொடுப்பதற்கு பேரம் பேச்சு இடம் பெற்றதாகவும் ஒரு செய்தி கசிந்து கொண்டது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குருசந்திர யோகம் தான்.

## குரங்கின் கையில் கத்தி

முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளுக்கும் ஈ.பி.ஆர். எல்.எப். செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும்மிடையில் கடும் தலைமைப் போட்டியும் அதற்கான சொற்போரும் இடம் பெற்று வருகிறது. அதில் பழைய பல மறைக்கப்பட்ட விடயங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. குரங்கின் கையில் கத்தி என்றொரு பழ மொழி நினைவுக்கு வருகிறது.

## புத்திஜீவித்தனம்.

பேராதனைப் பல்கலைக் கழக அரசவியல் தமிழ் பேராசிரியர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். என்ற விதமாக தமிழ் தினசரி ஒன்றில் கட்டுரை எழுதினார். சில நாட்கள் கழித்து ஆங்கில வார இதழில் சந்திரிகாவிற்கு வாக்களிக்கும் படி வெளிவந்த வேண்டுகோளில் கையெழுத்-திட்டிருந்தார். புத்தியால் சீவிப்பது என்றால் இப்படித்தான் புத்திஜீவித்தனம் பண்ண வேண்டும்.

## ஒரு இரவில் 35 லட்சம் ரூபா

நான் வெலிகந்தை ராணுவத்தின் 231வது படைப்பிரிவின் தலைமை முகாமிற்கு அருகில் வசிக்கிறேன். தினமும் இரவு வேளைகளில் எழுபது குண்டுகள் ஏவப்படுவதை எண்ணுவேன். ஒரு குண்டின் விலை சுமார் 50 ஆயிரம் ரூபா வாகும். ஒரு இரவில் ஏவப்படும் குண்டுகளின் மொத்தப் பெறுமதி 35 லட்சம் ரூபாவாகும். இந்தத் தொகையில் ஒரு பகுதியைத் தானும் இப்பகுதி மக்களது ஏழ்மையைப் போக்க செலவு செய்யப்படுவதில்லை. இவ்வாறு வெலிக்கந்த சிங்கள மகா வித்தியாலய அதிபர் என்.கே . இராஜகருணா வைபவம் ஒன்றில் கூறி இருக்கிறார்.

## தம்பி தொண்டமான்

தொண்டமானின் மறைவுக்குப் பின் அவரது விருப்பத்தின் படி இ.தொ.கா. வின் சகல அதிகாரங்களையும் 'தம்பி' ஆறுமுகம் தொண்டமான் கையில் எடுத்துக் கொண்டு சர்வ அதிகாரத் தர்பார் தொடங்கியுள்ளார். இதனால் பல மூத்த தலைவர்கள் மனக் கசப்படைந்துள்ளனராம். சிலர் பணிந்து போய் பதவியும் காரியமும் பெறத்தயாராகி நிற்கின்றனராம்.

நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியாவில் அகதிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும்

சர்வதேச முன்றலில் இலங்கை தனது பொருளாதார வளர்ச்சியின்மையையும், போர் அனர்த்தங்களையும் காரணங் காட்டி முதலாளித்துவ நாடுகளிடம் உதவி பெற கையேந்தி நிற்கும் நிலமையினை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ள தனவந்த நாடுகள் எம் அரசியல் தலைமைகளின் பலவீனத்தையுணர்ந்து தனது பொருளாதாரக் கால்களை இங்கு அகல விரித்துள்ளன. இவை "அரசசார்பற்ற நிறுவனங்கள் (NGO)" என்ற பெயரில் அரசியல் தலைமைகள், முதலாளித்துவ சீமான்கள் ஆகியோரின் கைகளில் பிணைக்கப்பட்ட மாடுகளாக சமூகப் பரப்பில் மேயத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் பொருளாதார மையங்களில் நிலை நிறுத்தப்பட்ட இவர்கள் வவுனியாவிலும் சமூக அந்தஸ்தை நிலையாக்கிக் கொண்டனர். இதன் பயனாக இன்று வவுனியாவில் 60 திற்கும் மேற்பட்ட NGO க்கள் கிளை பரப்பி மக்கள் வசீ கரிப்பிற்காக சுயதொழில் ஊக்குவிப்புக்களின் பெயரில் கிராமிய மட்ட சுய தொழில் ஊக் குவிப்புக் கொடு கடன்களை வழங்கி வருகின்றமை பாராட்டிற்குரியதொன்றாக விளங்கினும் அக் கொடுகடனிற்கான வட்டி வசூலிப்பு வீதம் மக்கள் மத்தியில் அதிருப்தியையும் உண்டு பண்ணி-யுள்ளது.

சமூகப் பரப்பில் தமது செயற் திறன் தன்மைகளை நிலைநிறுத்த பேரினவாத அரசியல் போர் அனர்த்தங்களில் பாதிப்படைந்த கிராம மக்களின் நலன்களைக் காக்கவும் இந்நிறுவனங்கள் போட்டி போடத் தொடங்கி உள்ளன. இப் போட்டித் தன்மை "கிராமப் பகிர்வு" அடிப்படையில் ஒவ்வொரு பின்தங்கிய கிராமங்களிலும், தம்மை அடையாளங் காட்டத் தொடங்கியுள்ளன.

அத்தோடு மட்டுமன்றி கிராமிய மட்டங்களில் NGO க்களின் கள வேலைகளிற்காக நடுத்தர வர்க்க, ஏழை வர்க்க இளைஞர் யுவதிகள் பயன் படுத்தப் படுகின்றனர். படித்தும் வேலையற்ற இவ் இளைஞர் சமுதாயம் "தொண்டர்கள்" என்ற பதவி முத்திரையுடன் வேதனமின்றிய கடும் உழைப்பினை நல்கி வருகின்றனர்.

அரச உத்தியோகத்தர்கள் பலர் இவ் வெளிநாட்டு நிறுவனங்களில் பகுதி நேர ஊழியர்களாயும் அதன் மூலம் 10,000/= மேல் வேதனம் பெறுபவர்களாயும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் 1995, 1996 ஆகிய ஆண்டு காலப் பகுதியில் இடம் பெற்ற வன்செயல்களினால் இடம்பெயர்ந்த யாழ், வன்னி மக்கள் அகதிகளாக வரவேற்கப்பட்டு வவுனியாவில் முகாம்களில் தங்க வைக்க-ப்பட்டனர். இம் மக்களிற்கு சேவை செய்வதற்கு வவுனியாவில் ஒரு NGO (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) சுகாதாரத் தொண்டர்களை வவுனியா சுகாதார திணைக்களத்தின் அனுமதியுடனும் சிபார்சின் பெயரிலும் சுகாதாரத் தொண்டர்களை நலன்புரி நிலையங்களில் வேலைக்கு அமர்த்தியது. இவர்களில் மிகமிக வறிய குடும்ப யுவதிகள் பலா சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்-பட்டதுடன் மாத வேதனம் 1500/= வழங்கப்பட்டு வந்தது.

**வவுனியாவில் 60க்கு மேற்பட்ட NGOக்கள் இயங்குகின்றன!**

ஆனால் இன்றுவரை ஆறுமாத காலமாக இச் சுகாதார தொண்டர்களுக்கு சம்பளமோ வேறு சலுகைகளோ அந்த NGO வினால் வழங்கப்படவில்லை. ஏன்? என்ற வினா பாதிக்கப்பட்டவர்களை உளரீதியாக தாக்கியுள்ளது. வறுமையின் தாக்கம் NGO க்களுக்கு புரியுமா ???

இந்த நூற்றாண்டின் இறுதிப் போராக ஆனால் முடிவுறாப் போராக நடைபெற்றுக் கொண்டி-ருக்கும் ஓயாத அலைகள் நடவடிக்கையின் பின் என்றுமில்லா-தவாறு வவுனியா நகர், அதனை அண்மித்த பகுதிகளை நோக்கி அகதிகளின் வரவு அதிகரித்ததுடன் வவுனியா மக்களின் தற்காலிக இடம்பெயர்வும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் தங்கியுள்ள மக்களிற்கான சேவைகளையும், உதவிகளையும் ICRC, SLRC ஆகிய நிறுவனங்-களும் ஏனைய NGO க்களும் செய்து உதவிக்கொண்டு இருக்கின்றன.

இந்நிறுவனங்கள் நிவாரணப் பொருட்களை கிராம சேவகர்களூடாக இடம் பெயர்ந்த மக்களிற்கு வழங்கி வருகின்றன. இதனை தமது சுரண்டல் தனத்திற்கு பயன்படுத்த முனைந்துள்ள கிராம சேவகர்கள் நிவாரணப் பொருட்களை பல்வேறு பதிவுகளின் மூலமும் சூறையாடி பணமாக்கி வருகின்றனர். இவர்கள் ஏழை வயிறுகளை பிராண்ட வந்த பிசாசுகள் என மக்கள் சபிக்கின்றனர். இக்காலப் பகுதியில் வவுனியாவில் ஒரு கிராம சேவகர் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக நிவாரணப் பொருட்களை தனியார் கடைகளிற்கு கடத்தி பணம் சம்பாதித்ததனை மக்கள் இனங்காட்டியுள்ளதுடன் அக் கிராம சேவகர் விசாரணைகளிற்கும் மேலதிகரிகளினால் உட்படுத்தப்-பட்டார். ஆனால் அவ் உத்தியோகத்தர் இதுவரை தண்டணை எதையும் பெற வில்லையே என மக்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

ஆனால் இந்த NGO ஒன்றின் அடாவடித் தனத்தினால் இடம் மாற்றம் செய்யப்பட்ட கிராம சேவக ரும் உண்டு. வவுனியாவின் பாவற்குளம் கிராமத்தில் பாடசாலையில் தங்கியிருந்த மக்களுக்கு அக்கிராம சேவகர் ஊடாக நிவா ரண சேவை கள் வழ ங்க ப்ப ட்டு வந்தன. அப்போது கிராம சேவகருக்கும் NGO மேலதிகாரி ஒருவருக்கும் நடைபெற்ற வாய்த் தர்க்கம் காரணமாக மேலதிகாரி கிராம சேவகரைப் பற்றி வவுனியா அரச அதிபரிடம் புகார் செய்ததையடுத்து கிராம சேவகர் இடமாற்றம் செய்யப்பட்டார். ஆனால் விசாரணையற்ற இடம் மாற்றத்தினை ஒரு பக்கசார்பான ஆதரவிற்காக மேற்றகொள்ளப் பட்டிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

இத்தகைய சூழலிலே வவுனியா நிர்சலனமற்ற அனு பவங். களை மதிப்பிட்டு அரசியல், போர்ப் பிளவுகளின் ஆழத்தையும் அறிந்து வற்றிய கிணற்றிற்கு குளத்து நீரை நிரப்பும் யுக்தியை NGO க்கள் கையாள்வதனால் பலனடைபவர்கள் வறுமைக் கோட்டிற்கும் மேல் உள்ள சீமான்களேயாவர். விதவைகளிற்காக குரல் எழுப்ப தயங்கும் இவ் NGO க்கள் விதவைகளுக்கு பொட்டு வைக்க புள்ளி விபரம் சேகரிக்கும் மறைமுக ஏப்பம் ஏன்.

அரச நிறுவனங்களில் ஊழல் இடம் பெறுவதை மக்கள் இலகுவில் அறிந்து கொள்வர். ஆனால் மக்களின் இரட்சகர்கள் போல் ஒன்றின் பின் ஒன்றாகத் தோற்றமெடுக்கும் அரச சார்பற்ற (NGO) நிறுவனங்களில் இடம் பெறும் ஊழல் மோசடிகளை மக்கள் இப்போது அறிந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தேசாபிமானி

# நாலும் நடக்கும் உலகிலே

## இன்னும் எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே ?

குமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு அனுதாபம் தெரிவிக்க ரணில் விக்கிரமசிங்க போயிருந்த போது எம்.ரி.வி. கமரா அவருக்காக அங்கு காத்திருந்திருக்க வேண்டும். அவர் அங்கு காணப்பட்ட போது எட்டு மணிக்கு சற்று முன்பாக இருக்கும். ஆனாலும் அவர் அங்கு சென்றது சக்தி தொலைக் காட்சியின் செய்தியில் தெளிவாக அடுத்த அரைமணிநேரத்தில் காட்டப்பட்டது. 9.30க்கு எம்.ரி.வி. ஆங்கிலச் செய்தியில் அவர் அங்கு நின்றது தமிழ்ச் செய்தியின் போலத் தெளிவாகக் காட்டப்படவில்லை. தொலைவில் அவர் முகம் தெரிந்தது. சிங்களத்தில் ? அது தான் சிங்களத்தில் சிரச செய்தி 6.30க்கு வந்த பிறகுதானே ரணில் அங்கே போனார். என்ன அற்புதமான உடனிகழ்வு!

## பத்திரிகா அதர்மம் !

சரிநிகருக்கு சிவசேகரம் எழுதுவதை நிறுத்திப் பல மாதங்கள் ஆகிவிட்டது என்று நினைத்தேன். டிசெம்பர் மாதம் கைலாசபதி பற்றிய ஒரு கட்டுரை அவருடைய பேரில் சரிநிகரில் வந்திருந்தது. வாசித்துப் பார்த்தேன். எப்போதோ வாசித்த நினைவாக இருந்தது. விசாரித்தேன். கைலாசபதி பற்றி தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்ட ஒரு புத்தகத்தில் வந்த கட்டுரை அது. சரிநிகர் அந்த உண்மையை ஒரே அமுக்காக அமுக்கி விட்டது. கைலாசபதி பற்றி அவதூறாக மட்டுமே எழுதிவரும் இந்த ஏட்டில் ஏன் இப்போது இந்தக் கட்டுரை வந்தது என்று தெரியவில்லை. படு வேகமாகச் சரிகின்ற விற்பனையைச் சரிக்கட்டுகிற முயற்சியோ என்றும் யோசித்தேன். சிவசேகரம் சரிநிகருக்கு மீண்டும் எழுதுகிறது போல ஒரு தோற்றத்தை உருவாக்க வேண்டிய தேவை? ஒரே கல்லில் இரண்டு மாங்காய் ?

சிலரை சிலகாலம் ஏமாற்றலாம். எல்லாரையும்....?

## கொலையும் கோமாளிகளும்

குமார் பொன்னம்பலத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பேசிய இ.தொ.கா புள்ளிகள் குமார் பொன்னம்பலத்தின் அகால மரணம் பற்றிப் பேசினார்களே ஒழிய அவருடைய கொலை பற்றியோ அதற்கான காரணம் பற்றியோ பேசவில்லை. மீன் போல தலையும் பாம்பு போல வாலும் காட்டுகிற பிராணியைப் போய் விலாங்கு விலாங்கு என்று ஏன் திட்டுகிறார்களோ !

## மரண விசாரணை அதிகாரிகள்

குமார் பொன்னம்பலத்தைக் கொன்றது விடுதலைப்புலிகளாகத்தான் இருக்கும் என்று தமிழக பார்ப்பனிய நாளேடான தினமணி (06-01-2000) எழுதியிருந்தது. தினமணிக்கு யார் சொன்னார்கள் ? துப்பறியும் புலி, இல்லையில்லை சிங்கம், சித்தார்த்தன் தொலைக்காட்சியில் கொலை நடந்த இரவு சொன்னதை வைத்துத் தினமணி சொன்னதா ? சந்திரிகா அரசின் மீது சந்தேகம் விழாமலிருக்க இவர்களுக்கெல்லாம் எவ்வளவு கரிசனை ! உண்மையை அறிய மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) அறிக்கை வரட்டுமே !! என்ன அவசரம்.

## பயங்கர நட்பு

இந்தியாவும் இஸ்ரேலும் பயங்கரவாதத்துக்கு எதிராக இணைந்து செயற்பட போகின்றன என்று தெரிய வருகிறது. பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் பயங்கரவாதம் இஸ்ரேலின் எல்லைக்குப் அப்பால் போகிறது. இந்திய அரச பயங்கரவாதம் காஸ்மீரிலும் கிழக்கு இந்தியாவிலும் மட்டுமன்றி இந்தியாவின் உள்ளே ஒடுக்கப்பட்ட சமூகங்கட்கு எதிராகவும் இந்தியாவுக்கு வெளியேயும் கையாட்கள் மூலமாக நடத்தப்படுகிறது. மேற்படி ஒத்துழைப்பு இந்தப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் சேர்த்தா ?

## தங்குவதற்கு உரிமையற்றோர்.

கடந்த சிலவாரங்களாக நடத்தப்படும் தேடுதல் நடவடிக்கைகளின் பேரில் கண்டியில் சில மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு கண்டியில் வந்து நிற்கத் தகுந்த காரணம் ஏதும் இல்லை என்பதாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மலையகத் தமிழர்களுக்குத் தோட்டங்களில் உழைத்துத் தேய்ந்து சருகோடு சருகாவதை விட இந்த மண்ணில் தங்கியிருக்க எந்த உரிமையும் இல்லை என்பது தான் இலங்கையின் சுதந்திர காலம் முதலாக நமக்குத் திரும்பத் திரும்ப பல வழிகளிலும் சொல்லி வரப்படுகிற உண்மை.

அரசாங்கத்திற்காக கையுயர்த்திக் கைகொடுக்கிற தமிழ் எம்.பிமார் இந்த விதமான மணித உரிமை மீறல்கள் நடக்காமல் இருக்க எதுவும் செய்வார்களா ? அவர்கள் ஏன் செய்யவேண்டும். அதற்காகவா அவர்களுக்குச் சம்பளமும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன ?.

# மலையக இளைஞர்களின் அரசியல் தெரிவு !

மலையக தமிழ் இளைஞர்கள் பல விதமான அரசியல் தாக்கங்களை உணரத் தொடங்கியுள்ளனர். அரசியல் அக்கறையற்றவர்களாக அவர்களது தனிப்பட்ட விவகாரங்களிலேயே நாட்டம் கொண்டிருந்த எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் மலையத்தமிழ் இளைஞர்கள் அரசியலினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படும் தாக்கங்களை உணரத் தொடங்கியுள்ளனர்.

வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதிலும் இடமாற்றங்களை பெறவும் பாராளுமன்ற அரசியல்வாதிகளின் செல்வாக்கே மிகவும் வெளிப்படையாக இருப்பதை உணருகின்றனர். ஆசிரியர்களை பழிவாங்கும் நோக்கில் தண்டிக்கும் நோக்கில் இடமாற்றங்கள் அடிக்கடி இடம் பெறுகிறது. சமூர்த்தி முகவர்களாக இருப்பவர்கள் சுதந்திரமாக எதனையும் செய்ய முடியாதவர்களாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதிநிதிகளாக வேலை செய்ய வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இதைவிட சுதந்திரமாக சிந்தித்து செயற்பட முற்படு கின்றவர்களுக்கு எதிராக சில அரசியல் தலைவர்கள் அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர். அவர்களுக்கு பிடிக்காதவர்கள் 'புலிப் பயங்கரவாதிகள்" என்று மிகவும் வசதியாக மடக்கிவிடுகின்றனர். அதை விட அவ்வரசியல்வாதிகளின் கையாட்களின் உதவியுடன் காடைத்தனங்களை புரிந்து வருகின்றனர். அந்தக் காடைத்தனங்களைக் கண்டுகொள்ளாதது போன்று சில பொலிஸ் நிலையங்களும் நடந்து கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக அதிக அளவில் புலிப்பயங்கரவாதிகள் என்ற பேரில் மலையகத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இவையெல்லாம் மலையகத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் அரசியல் அக்கறையற்று இருக்க முடியாது என்ற கருத்து நிலை பரவலாக ஏற்பட்டு வருகிறது. அக்கருத்துக்கள் இரண்டுவிதமாக நிலவுகிறது. ஒன்று பலமாக இருக்கும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் அடாவடித்தனங்களை புரிந்துவரும் சில அரசியல்வாதிகளிடம் சரணடைந்து விடவேண்டும் என்ற போக்காகும். மற்றது அந்த அடக்குமுறைக்கு எதிரான அரசியல் போக்குடன் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். இக்கருத்துடனேயே பெரிய எண்ணிக்கையிலான மலையகத் தமிழ் இளைஞர்கள் இருக்கின்றனர்.

ஆனால் அரச அடக்கு முறைகளுக்கு எதிரான அரசியல் போக்கென்று கூறிக்கொண்டு வசதியாக இன்று மலையகத்தில் ஐ.தே. கட்சி ஆதரவான போக்கை மட்டுமே காண்பது. என்பது தாச்சியிலிருந்து அடுப்பில் விழுகின்ற நிலைமையாகவே இருக்கும். ஏனெனில் அப்போக்கில் இருப்பவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் இன்று மலையகத்தின் மீது இருக்கும் அடக்குமுறைகள் மாற்றமடையப்போவதில்லை. அதனை ஐ.தே. க்ட்சியின் 17 வருட ஆட்சிக்கால அனுபவங்கள் எமக்கு உணர்த்துகின்றன.

எனவே மலையகத் தமிழ் இளைஞர்களின் தெரிவு வேறொன்றாகவே இருக்க முடியும். அந்தத் தெரிவு என்ன ? யாருக்கும் சரணடையாத, பெரும்பாலான மலையகத் தமிழ் மக்களின் நிலமை அடிப்படையாகக் கொண்ட மாக்சிச லெனினிஸ அரசியல் சக்திகளுடன் இணைந்துகொள்வதே சரியான தெரிவு இருக்க முடியும்.

◆◆◆

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYA POOMI
පුදිය පුමි
சுற்று 07 ஜன/பெப்ரவரி 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 33

S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844

## கருத்து எழுத்துச் சுதந்திரம் ?

*ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பத்திரிகையாளர்கள் உட்பட பல தொடர்பூடகவியலாளர்களையும் சாடிவருவதால் தொடர்பூடக சுதந்திரம் என்பது பெரிதும் அச்சுறுத்தப்படுகிறது. சில பத்திரிகை ஆசிரியர்களையும், சில தனியார் தொலைக்காட்சிகளையும், வானொலிகளையும் பெயர் குறிப்பிட்டு பலவிதமான குற்றச்சாட்டுகளை சுமத்திவருகிறார். இதனால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. பத்திரிகைகளையும், தொலைக்காட்சிகளையும், வானொலிகளையும் மிரட்டுவதாக அமைந்துள்ள அவரது பேச்சுக்களினால் தொடர்பூடக சுதந்திரம் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.*

*இந்த சமூக அமைப்பில் தொடர்பூடங்கள் நடுநிலையாக இயங்கும் என்று யாரும் நம்பத்தேவை இல்லை. நடுநிலையாக இயங்குவதாக கூறப்பட்டபோதும் அவற்றுக்கெல்லாம் அரசியல் நோக்கமும் பின்னணியும் இருக்கின்றன. அவற்றின் செயல்களில் பிறழ்வும் தவறுகளும் இருக்கலாம். அவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுக்கவும் முடியும். சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுப்பது தொடர்பூடங்களுக்கு பெரிய பிரச்சினையாக இராது. ஆனால் நிறைவேற்று அதிகாரங்களை தன்னகத்தே வைத்திருக்கும் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாத ஜனாதிபதி என்பவற்றுக்கு மத்தியில் தொடர்பூடகங்கள் சுதந்திரமாக இயங்க முடியுமா ? ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் தொலைக்காட்சியில் தோன்றி மூன்றரை மணித்தியாலயங்கள் பேசினார். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அவருக்கு எதிராக பிரசாரம் செய்த ஊடகங்களை அவ் உரையில் கண்டித்தார். தேர்தல் பிரசாரக் கட்டத்தின் போது இடம்பெற்றக் குண்டுவெடிப்பில் காயமடைந்த பிறகு அவருக்கு அனுதாபமாக நடந்து கொள்ள வில்லை என்றும் அவர் சில ஊடகங்களை அதிகநேரம் சாடினார். மீதி நேரம் தமிழ்மக்களை விழித்தும் பேசினார். கடந்த வருடம் பல தொடாபூடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். 'சட்டன' என்ற பத்திரிகையின் ஆசிரியர் கொலை செய்யப்பட்டார். சில தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டனர். அவற்றுக்கு எதிராக சரியான நடவடிக்கைள் எடுக்கப்படவில்லை. கடந்த வருடம் தொடர்பூடகங்களுக்கும் எதிரான கருத்துக்களை அரச தரப்பினர் பரப்பி வந்தனர். அந்த நடவடிக்கைகளின் உச்சமாகவே தற்போது ஜனாதிபதி முதல் அரசாங்க எம். பிக்கள் வரை பலரும் தொடர்பூடகங்களுக்கு எதிராக பேசி வருகின்றனர்.*

*ஐ.தே. கட்சி காலத்தைப் போன்று தற்போது பத்திரிகையாளர்கள் கொல்லப்படவில்லை என்றும் தொடர்பூடக சுதந்திரம் நசுக்கப்படவில்லை என்றும்ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் பலரும்கூறிவருகின்றனர். இவ்வாறான பேச்சுகளின் மூலம் பூடகமாக அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவே கொள்ள வேண்டியுள்ளது.*

*ஏற்கனவே யுத்தச்செய்திகளுக்கு தணிக்கை இருக்கிறது. அதனால் யுத்த நடவடிக்கைள் பற்றிய வதந்திகளிலேயே மக்கள் அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். அதே போன்று அரசாங்கம் பற்றிய விமர்சனங்களை வெளியிடுகின்ற தொடர்பூடகங்களை மிரட்டுவதன் மூலம் மக்கள் மேலும் குழப்பமடைவார்கள் என்பதை ஆட்சியாளர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும். அடக்குமுறைகளை முடுக்கிவிட்டு அதிகாரத்தின் உச்சதிற்கே செல்ல முயற்சிக்கும் ஆட்சியாளர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் ஏற்படும் விளைவுகளுக்கான பொறுப்பை அவர்களே ஏற்க வேண்டும்.*

*இந்நிலைமையில் நாட்டுமக்களின் பொறுப்பு எதுவாக இருக்கும் என்பதை விளங்கிக் கொள்வது அவசியம். பேச்சு எழுத்து சுதந்திரம் நசுக்கப்படும்போது அவற்றுக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்காவிட்டால் பின்பு நமக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள ஒட்டுமொத்தமான அடக்குமுறைகளை தொடர்பூடகங்களானது உண்மையான செய்திகளை வெளியிடும் சுதந்திரத்தை கொண்டிருப்பதுடன் மக்களை பாதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் உரிமையையும் கொண்டிருக்க வேண்டும். அதற்கு பாதிப்பு ஏற்படுகின்றபோது மக்கள் இருட்டில் விடப்படுவர். மக்கள் தங்களது கருத்துக்களை வெளியிட முடியாதவர்களாகி விடுவர். அவ்வாறான சூழ் நிலையில் ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைகளுக்கு மக்கள் மிகவும் இலகுவாக பலியாக்கப்படுவர்.*

*எனவே இருக்கின்ற கருத்து எழுத்து, பேச்சு சுதந்திரத்தை பாதுகாக்கவும் அவற்றுக்கு விடப்படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும் ஐக்கியப்பட்டு அணிதிரள வேண்டியது அவசியம் என்பதையே சமகால சூழ்நிலை எமக்கு உணர்த்துகிறது.*

***ஆசிரியர் குழு***

# இரு ஆளும் வர்க்க கட்சிகளாலும் நாட்டை மீட்டு எடுக்க முடியாது !

கடந்த டிசம்பர் 21ல் நடைபெற்ற நான்காவது ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அடுத்த ஆறு வருடங்களுக்கான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரது வெற்றி ஐம்பது வீதத்தின் விளிம்பு நிலை வெற்றியேயாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த 62 வீத வெற்றியானது இம் முறை 11 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. தமிழ் மக்களின் நம்பிக்கையை சந்திரிகா முழுமையாக இழந்து நிற்பதையே இது காட்டுகிறது. வழமை போன்று யு.என்.பிக்கு வாக்களிக் வேண்டும் என்ற தமிழ் மேட்டுக் குடியினரது விருப்பத்தை எதிர்ப்பு வாக்குகள் என்ற வகையில் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து செயலாக்கி உள்ளனர். அவ்வாறு ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்கு மாறு வேண்டுகோள் விடுத்தவர்கள் பதினேழு வருடகால பேரினவாத பாசிசத்தன்மை வாய்ந்த கொலைகார ஆட்சியின் நடைமுறைகளை மூடி மறைத்துள்ளனர். மேலும் இச் செயலானது பேரினவாதக் கட்சிகள் இரண்டிற்கும் அப்பால் மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றினைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை மறுப்பதாகவும் அமைந்து கொண்டது. இது தமிழ்த் தலைமைகள் அனைத்தினதும் அரசியல் வறுமை மட்டுமன்றி பழைய தலைமைத்துவங்களின் அடிச் சுவட்டின் அடிபிசகாத பின்பற்றலுமாகும்.

மேற்படி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியும் பொதுசன முன்னணியின் வெற்றியும் ஏதோ முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கு கிடைத்த வெற்றி என்று சிலர் மனம்குளிரச் செய்கின்றனர். ஆனால் அது வெறும் யு.என்பி. விரோதம் என்ற பழையகால வாய்பாடே. தவிர இன்றைய அரசியல் யதார்த்தம் சார்ந்த ஒன்றல்ல என்பதை அத்தகையவர்கள் புரிந்து கொள்வதாக இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள மோசமான பேரினவாதிகளை இருகரம் கூப்பி வரவேற்று அமைச்சர் பதவி வழங்கி நிற்பவர்கள் ஜனாதிபதியும் அவரைச் சூழ உள்ளவர்களுமாவர். அது மட்டுமன்றி கடந்த ஐம்பது வருட ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளே முன்னெடுக்கப்பட்டன. ஆட்கள் மாறினார்களே தவிர அதிகாரக் கதிரைகளும் ,அமுலாக்கப்பட்ட பொருளாதார அரசியல் கொள்கைகளும் பழைய ஆட்சியின் தொடர்ச்சியாகவே அமைந்தன. திறந்த பொருளாதாரக் கொள்கை, தனியார் மயம் , இனப்பிரச்சினைத் தீர்வு இன்மை, யுத்த விஸ்தரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு அமெரிக்க ஏகாதிபத்திய அரவணைப்பு ஆகிய பிரதான விடயங்களில் பொதுசன முன்னணி ஆட்சியானது முன்னைய ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை விட வித்தியாசமான எத்தகைய வழியில் சென்றது என்பதே உற்று நோக்க வேண்டிய ஒன்றாகும்.

அவ்வாறு நோக்கும் போது நாட்டின் அரசியல் பொருளாதார சமூக கலாச்சார யதார்த்த நிலைமைகளில் யு.என்.பி. விரோத நிலைப்பாடு என்பது ஐந்து வருட பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியின் நடைமுறைகளால் அடித்துச் செல்லப்பட்டுவிட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. அதன் காரணமாகவே பெயருக்கு ஐக்கிய முன்னணி என்ற போதிலும் சிறிலங்கா சுதந்திர கட்சியானது ஏனைய நான்கு கட்சிகளையும் ஓரங்கட்டிவிட்டு யு.என்.பியினருடன் உறவு கலந்து நிற்கிறது. இது வர்க்க வளர்ச்சியின் அதிகார நிலையின் வெளிப்பாடாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் இன்று தேசிய முதலாளித்துவ சக்திகளின் பிரதிநிதி அல்ல என்பதையே நடைமுறைகள் மூலம் நிருபித்துள்ளன. அதே வேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ள தேசிய முதலாளித்துவ சக்திகள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன. ஏனோ தானோ என்று தலைமைத்துவத்தின் பின்னால் இழுபடுகின்றன. அதேவேளை யு.என்.பி நிலைப்பாட்டில் இருந்து வந்த பலர் இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பக்கம் பாய்ந்தோடிச் செல்கிறார்கள். அவர்களில் பலர் அடுத்த பாராளுமன்றப் பட்டியலில் இடம் பெற உள்ளனர். அதனால் பழைய நிலை சுதந்திரக் கட் சி

**மூன்றாவது அரசியல் சக்தி ஒன்று அவசியம் :**

அமைப்பாளர்கள் ஓரங்கட்டப்பட்டும் வருகின்றனர்.

இவை அனைத்தும் தற்செயலானவைகள் அல்ல. இலங்கையின் ஆளும் வர்க்க சக்திகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் ஒன்றிணைவையும் குறிகாட்டி நிற்பதாகும். அதன் அடிப்படையிலேயே பொதுசன முன்னணி தயாரித்த தீர்வுப்பொதியை மூலையில் கட்டி வைத்து விட்டு புதியதொன்றை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நிற்கத் தயாராக உள்ளனர். அவ்வாறானால் தீர்வு எப்படி அமையப் போகின்றது என்பதை அரசியல் ஞானம் உடையோர் ஊகித்துக் கொள்ள முடியும்.

எனவே ஜனாதிபதி தேர்தல் முடிவும் அதனைத் தொடர்ந்து நடைமுறைகளும் அடுத்து இடம்பெறப் போகும் பாராளுமன்றத் தேர்தலும் நாட்டிற் கோ அன்றி மக்களுக்கோ எவ்வித பலாபலன்களையும் தரப் போவதில்லை என்பதை முன்னறிவிப்பு செய்வதாகவே காணப்படுகின்றது. ஐம்பது வருடங்களாக மாறி மாறி ஆண்டு வந்த உயர்வர்க்க குடும்ப ஆட்சியை நீடிக்கவே இருபெரும் கட்சிகளும் முயலுகின்றனவே தவிர நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து சுபீட்சப் பாதையில் செல்வதற்கல்ல என்பதே உண்மையானதாகும்.

மேலும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தேர்தலகால பொய்வாக்குறுதிகள் இரு பேரினவாதக் கட்சிகளின் சுயருபத்தை மறைக்க உதவினாலும் அடிப்படையில் இரு கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. அதன் காரணமாகவே தற்போது பேரினவாத சக்திகளின் விருப்பத்தின்படி அவை இணைந்தும் செயல்பட முன் வந்துள்ளன. ஆனால் இவர்களது இணைவும் தீர்வு யோசனைகளும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை எந்தளவிற்கு பூர்த்தி செய்யப் போகின்றன என்பதே கேள்வியாகும்.

இந் நிலையிலேயே இரண்டு ஆளும் வர்க்கப் பேரினவாதக் கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கும் அப்பால் மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றின் தோற்றமும் வளர்ச்சியும் மக்களுக்குத் தேவைப்படுகின்றது. அதனை வெறுமனே தேர்தல்களில் மட்டும் நின்று தோற்றுவிக்க முடியாது. தேர்தலை ஒரு பிரச்சார இடமாகவும் களமாகவும் பயன்படுத்தலாமே தவிர அதற்கு அப்பாலான வெகுஜனப் போராட்டங்களின் ஊடாகவே மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றினை தோற்றுவிக்க முடியும். அத்தகைய மூன்றாவது சக்தியானது சமகாலப் பிரச்சினைகளில் அரசியல் யதார்த்தத்துடனும் தூர நோக்குடைய அரசியல் மார்க்கத்துடனும் இணங்கிப் போகும் கொள்கைகளை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இம் மூன்றாவது அரசியல் சக்தி நாட்டின் இடதுசாரி ஜனநாயக சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டக் கூடிய பரந்த அடிபடையிலான வேலைத்-திட்டத்தைக் கொண்டிருத்தல் அவசியமாகும். குறிப்பாக இன்றைய பிரதான முரண்பாடாகி நிற்கும் தேசிய பிரச்சினைக்கு உரிய தீர்வை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் முன் வைக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். பேரினவாதத்திற்கும் யுத்த வெறிக்கும் வளைந்து கொடுத்துப் பணிந்து நிற்காத நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றினைத் தோற்றுவித்து முன்னெடுப்பது இன்றைய அரசியத் தேவையாகும். இதில் நேர்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகள் அனைத்தும் குறுகிய சுயநலமற்ற தமது பங்களிப்பை வழங்கியே ஆக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனைச் செய்யத் தவறினால் அழிவுகள் தொடரவும் நாடு மேலும் நாசமடையவும் உதவுபவர்களாக மட்டுமே இடதுசாரி சக்திகள் இருக்க முடியும்.

## வெட்கம் கெட்ட தமிழ் கட்சிகள்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் அனைத்தும் நடந்து கொண்ட முறை வெட்கக் கேடானதாகும். தமிழ் மக்களை கடந்த 22 வருடங்களில் மிக மோசமாகக் கொடுமைப்படுத்தி வந்த, இன்றும் அவல நிலைக்குள் அமுக்கி வைத்திருக்கின்ற இரண்டு ஆளும் வர்க்க பேரினவாத கட்சிகளுக்கே தமிழ் கட்சிகள் அனைத்தும் ஆதரவு கொடுத்து நின்றன. சில கட்சிகள் நேரடியாகவும் சில மறை முகமாகவும் செயல்பட்டன. எந்தவொரு கட்சியாவது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் சார்பாக வோ கொள்கை ரீதியாகவோ நடந்து கொள்ள வில்லை. சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, யுத்த எதிர்ப்பு, சமாதானம் இயல்பு வாழ்க்கை என்பனவற்றை உறுதியான கொள்கையாக முன் வைத்து மூன்றாவது சக்தியாக நின்ற இடதுசாரி ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் தோழர் வாசு தேவநாணயக்காரவை ஆதரிக்க எந்தவொரு தமிழ்க் கட்சியும் முன் வரவில்லை. இது ஏன் ? தமிழ்க் கட்சிகள் அரசியல் பிழைப்புக்காக தமிழ் இனம் பற்றிப் பேசுகின்றனவே தவிர அடிப்படையில் அவை உயர் வர்க்க நலன்களையே முன்னெடுத்துச் செல்வதேயே காட்டுகின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



# குமார் பொன்னம்பலம் ஒரு அரசியல் மதிப்பீடு

**எஸ். ஜே. வீ.** செல்வநாயகம் உட்பட, இதுவரை இறந்த எந்தத் தமிழ் அரசியல் தலைவரது சாவையும் விட குமார் பொன்னம்பலத்தின் சாவு தமிழ் மக்கள் மனதில் மிகுந்த வேதனையைத் தந்துள்ளது என்பது பற்றி மாற்றுக்கருத்துக்கு இடமிராது.

குமார் பொன்னம்பலத்தின் கட்சியான தமிழ்க் காங்கிரஸ் எந்த வகையிலும் குறிப்பிடத்தக்க ஒரு கட்சியோ இயங்குகிற ஒரு அரசியல் நிறுவனமோ இல்லை. அவர் சார்ந்திருந்த வெகுஜன அமைப்புக்கள் எதுவுமே வெகுஜன இயக்கங்கள் என்று குறிப்பிட முடியாதவை. உண்மையில், எந்த விதமான ஸ்தாபன வலிமையோ ஆதரவோ அற்ற ஒருவராகவே குமார் பொன்னம்பலம் கடந்த இருபது வருடங்கட்கும் மேலாகச் செயற்பட்டு வந்துள்ளார். அவரால் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு நல்ல தீர்வுக்கு வழிகாட்ட இயலும் என்று தமிழ் மக்கள் எப்போதேனும் எதிர்பார்த்தாகவும் கூற முடியாது. பாராளுமன்றப் பதவியையோ அல்லது வெறெந்தப் பதவியையோ பெற்றுத் தமிழ் மக்களுக்காகப் போராடும் வாய்ப்பை அவர் எதிர்பார்த்திருக்கவும் முடியாது. ஆனாலும் பாராளுமன்றப் படியேறிப் பாதம் தேய்ந்த எந்தத் தமிழ்த் தேசிய வாதியையும் விட அவர் இன்று தமிழ் மக்களால் போற்றப் படுகிறார்.


தமிழ் தேசியவாதக் கட்சிகளதும் இயக்கங்களதும் நடத்தை பற்றி நான் இங்கு விவரிக்க அவசியமில்லை. இந்த அரசாங்கத்தையோ அந்த அரசாங்கத்தையோ இன்னொரு நாட்டின் அரசாங்கத்தையோ ஏதோ ஒரு உளவு நிறுவனத்தையோ அண்டிப் பிழைப்பவராகவே தென்னிலங்கையில் செயற்படும் ஒவ்வொரு தமிழ்த் தேசியவாத அரசியல்வாதியும் தமிழ் மக்களால் அடையாளங் காணப்படுவது பற்றி எவர்கட்கும் மயக்கங்கள் இல்லை. தமிழ் மக்களுக்காக ஆயுதம் ஏந்திய கைகள் தமிழ் மக்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தாதபோது பாராளுமன்றத்தில் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைக்கு ஆதரவாகக் கை உயர்த்துகிற அவலத்தைக் கடந்த பத்தாண்டுகட்கும் மேலாக நாம் கண்டு வருகிறோம். இந்தப் பின்னனியிலேயே கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகக் குமார் பொன்னம்பலம் எழுப்பி வரும் எதிர்ப்புக் குரல் தமிழ் மக்களது உள்ளங்களின் உணர்வை பெருமளவும் சரியாகவே வெளிப்படுத்தியுள்ளது. இக்காரணமே, வேறு எந்தக் காரணத்தையும் விட, அவர்மீது தமிழ் மக்களின் மதிப்புக்கும் இன்று அவரது மறைவாலான மிகுந்த மன வேதனைக்கும் காரணமாகியுள்ளது. அவரால் அரசாங்கத்தினதும் காவற் படைகளதும் அத்து மீறல்களின்று தமிழர்களைக் காக்க முடியும் என்று யாரும் நம்ப இடமில்லை. எனினும் தன் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு கொடுமையையும் உலகிற்குப் பகிரங்கப்படுத்துவதில் அரவது பணி முக்கியமானது. குமார் பொன்னம்பலத்தின் இழப்பு எந்த விதமான அரசியல் மாற்றத்தையும் கொண்டுவருமா என்பதும் அவர் இறவாமல் இருந்திருந்தால் எந்தவிதமான அரசியல் மாற்றத்திற்கும் கருவியாக இருந்திருப்பாரா என்பதும் பாரிய விடயங்களல்ல. ஆனால் அவரது கொலையின் அரசியல் முக்கியத்துவம் மிகவும் பெரியது. அவரது இழப்பின் காரணமான மனவேதனையை விட அவரது கொலையின் அரசியல் பின்னணி மிகவும் முக்கியமானது. இது பற்றித் தமிழ் மக்கள் அசட்டையாக இருக்க முடியாது. இக் கொலை பற்றி மேலும் விரிவாக ஆராய இப்போது நம்வசமுள்ள தகவல்கள் போதியனவல்ல. எனினும் இக் கொலை தமிழ் மக்களுக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள ஒரு பெரிய சவால் என்பதையும் அதைத் தமிழ் தேசிய இனம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பதிலேயே அதன் இருப்பு தங்கியுள்ளது என்பதையும் இப்போதே துணிந்து கூறலாம்.

குமார் பொண்ணம்பலத்தின் அரசியல் முக்கியத்துவம் தமிழர்களின் உரிமையைக் காகக் குரல் கொடுத்த அளவிலேயே இன்று தமிழ் மக்களாலும் பேரினவாதிகளாலும் மட்டுமன்றி மற்றும் பலராலும் கவனிப்பில் எடுக்கப்பட்டு வந்துள்ளது. எனினும், பிரேமதாசவின் மரணம் வரை, வாய்திறக்கத் திராணியற்று, இன்றைய அரசியல் ரட்சகர்கள் எல்லாரும் சோர்ந்து போயிருந்த அக் காலத்தில் குமார் பொன்னம்பலம் பிரேமதாசவின் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்துக் தைரியமாக எழுதி வந்ததைப் பலரும் இன்று குறிப்பிடுவதில்லை. ஈவிரக்கமற்ற அரசியற் பழிவாங்கற்காரராக அறியப்பட்ட பிரேமதாசாவின் ஆட்சியின் போது குமார் பொன்னம்பலத்தின் உயிருக்கு ஏற்படாத ஆபத்து இந்த ஆட்சியின் போது ஏற்பட்டிருக்கிறது. அவர் கூடிய கவனத்துடன் இருந்திருந்தால் உயிர் தப்பியிருப்பார் என்றகருத்து ஒருவேளை சரியாகவே இருந்தாலும், அவரைக் கொலை செய்யத் தீர்மானித்தவர்கள் அவரை மேலும் அதிக காலம் விட்டுவைத்திருக்க மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி.

குமார் பொன்னம்பலத்தின் இன்னுமொரு முக்கியமான பங்களிப்பு 1988 சனாதிபதித் தேர்தலில் அவர் சிரிமா பண்டாரநாயக்கவுக்கு ஆதரவாக வடக்கில் பிரசாரம் செய்தமையாகும். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி யு.என்.பி. ஆட்சிக்கு முட்டுக்கொடுக்கவே அன்றும் விரும்பியதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் காலத்தாழ்த்தி எடுத்த தீர்மானத்தையும் மறுத்தே அன்று வடக்கின் முற்போக்குச் சக்திகளுடன் குமார் பொன்னம்பலம் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். தெற்கில் ஜே.விபி. பகிஷ்கரிப்பு என்ற பேரில் பிரேமதாசவின் வெற்றிக்கு வசதியாகச் செயற்பட்டதும் அதற்காக அவர்கள் பின்னர் கொடுத்த விலையும் நாம் நினைவில் இருத்தத்தக்கவை சந்திரிகா குமாரதுங்க அன்று சிரிமா பண்டாரநாயக்காவை ஆதரித்துச் செயற்படவில்லை என்பதையும் பலர் நினைவு கூர விரும்புவதில்லை.

> **குமார் பொன்னம்பலத்தின் அரசியல் முக்கியத்துவம் தமிழர்களின் உரிமையைக்காக்க குரல் கொடுத்த அளவிலேயே இன்று தமிழ் மக்களாலும் பேரினவாதிகளாலும்' மட்டுமன்றி மற்றும் பலராலும் கவனிப்பில் எடுக்கப்பட்டு வந்துள்ளது.**

குமார் பொன்னம்பலம் 1982 சனாதிபதி தேர்தல் வேட்பாளராக நின்றது ஜே.ஆர். ஜயவர்தனாவிற்கு வசதியாக இருந்தது என்பது உண்மையே. அதேவேளை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமை மறை முகமாக ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு ஆதரவளித்த நிலைமையில் குமார் பொன்னம்பலத்தின் பாதிப்பு பெரிதாக இருந்திருக்க முடியாது. எனினும், கூட்டணியின் தமிழீழக் கோரிக்கை வெறும் பம்மாத்து என்பதை அம்பலப்படுத்துவதில் குமார் பொன்னம்பலம் ஓரளவேனும் வெற்றி கண்டார் என்பது உண்மை.



அவருடைய அரசியல் நேர்மையும் தைரியமும் தயக்கமற்ற செயற்பாடும் அவருடைய வலிமைகள். அதே வேளை ஒரு தனி மனிதராகச் செயற்படுவதன் விளைவான அகச்சார்பான அரசியல் நோக்கும் தனிமனித முரண்பாடுகளுக்கு அளிக்கப்படும்மிகையான முக்கியத்துவமும் அவருடைய அரசியற் பலவீனங்கள். தமிழ்த் தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறை மீது குவிக்கப்பட்ட அவரது கவனம் அந்த ஒடுக்குமுறைக்கும் பிற சமுதாய ஒடுக்குமுறைகட்கும் இடையில் உள்ள உறவை அவர் விளங்கிக் கொள்வதற்குத் தடையாக இருந்ததும் நம் கவனத்துக்குரியது.

> **அவருடைய அரசியல் நேர்மையும் தைரியமும் தயக்கமற்ற செயற்பாடும் அவருடைய வலிமைகள். அதே வேளை ஒரு தனி மனிதராகச் செயற்படுவதன் விளைவான அகச்சார்பான அரசியல் நோக்கும் தனிமனித முரண்பாடுகளுக்கு அளிக்கப்படும்மிகையான முக்கியத்துவமும் அவருடைய அரசியற்பலவீனங்கள்**

மேற்குறிப்பிட்ட அகச்சார்பும் தனிமனிதவாத நோக்கும் சில பாரிய அரசியல் தவறுகட்கும் அவற்றின் விளைவாக அவரது செல்வாக்கின் சரிவுக்கும் வழி வகுத்து உள்ளன. 17 வருட யு.என்.பி. ஆட்சிக்குப் பிறகு முதற் தடவையாக அந்தச் சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் வாய்ப்பு 1994ல் மக்களுக்குக் கிட்டியது. இந்த வாய்ப்பைத் தமிழ் மக்களும் தவறவிட விரும்ப வில்லை. சந்திரிகா குமாரதுங்க சில தமிழ் இயக்கங்கட்கு முன்னுரிமை கொடுத்துத் தன்னைப் புறக்கணித்த காரணத்தால் சுயேச்சையான தமிழ் குழு ஒன்றை உருவாக்கிக் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட்தன் மூலம் தனது உண்மையான செல்வாக்கு குறைவாக மதிப்பிடப்படும் ஒரு சூழ்நிலையை உருவாக்கியதில் அவரது தனிப்பட்ட மனத்தாக்கங்களின் பங்கு பெரியது. இதன் விளைவாக தமிழ் மக்களின் பேரில் பிழைப்பு நடத்தும் இயக்கங்கள் சந்திரிக்காவுக்கு மிகவும் அவசியமானவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள வசதி ஏற்பட்டதோடு, தமிழ் மக்களின் உரிமைகளை விற்றுச் சன்மானம் பெறும் வாய்ப்பும் வலுப் படுத்தப்பட்டது. அன்றைய நிலையில், சந்திரிகா என்ற தனி நபரை விட, அவரது தேர்தல் வாக்குறுதிகள் முக்கியமானவை என்பதையும் யூ.என்.பி. ஆட்சிக்கு எதிரான வெகுசன உணர்வு முக்கியமானது என்பதையும் குமார் பொன்னம்பலம் தவற விட்டுவிட்டார். இது அவரைப் பலவீன படுத்தியதை விட வருந்தத்தக்க விடயம் ஏதெனில் அடிவருடி அரசியற் தலைவர்கள் வலிமை பெற்றது தான்.

சந்திரிகா குமாரதுங்க ஆட்சி பற்றிய பிரமைகள் வேகவேகமாவே கலையத் தொடங்கின என்பது உண்மை. ஆயினும் சந்திரிகா ஆட்சியை விமர்சிக்கும் அடிப்படையாகத் தேசிய இனப்பிரச்சனையை மட்டுமே எடுத்துக்கொண்டதன் மூலம் அரசாங்கத்தின் தவறுகட்கு எதிராக நின்ற முற்போக்குச் சக்திகளிட- மிருந்தும் அவர் தனிமைப்பட நேர்ந்தது. அரசியல் வேலைத்திட்டங்களைவிடவும் தனிப்பட்ட உறவுகட்குஅவர் வழங்கிய முக்கியத்துவத்தின் விளைவாக, கேவலம் ஒரு மாகாணசபை சபாநாயகர் பதவிக்காக யு.என்.பிக்குப பின்னால் அலைந்து, எதிர்காலப் பாராளுமன்றப் பதவிக்காக ஜே.வீ.பிக்குப் பின்னால் அலைகிற ஒரு 'இடது சாரியாரால்' புதிய இடதுசாரி முன்னணியின் நேர்மையான கட்சிகளை விட அவருக்கு நெருக்கமாக இருக்க முடிந்தது. காமினி திஸ்ஸாநாயக உட்பட்ட பல யு.என்.பி. பேரினவாதிகளது இனவாதம் அவருக்கு முக்கியமானதாக தென்படத் தவறியது.

அரசாங்கத்தின் தீர்வுப்பொதியை விமர்சிப்பதன் மூலம் மக்கள் மத்தியில் தேசிய இனப்பிரச்சனை, சுயநிர்ணயம், இன அடையாளங்களும் அவை தொடர்பான பிரச்சனைகளும் என்பன பற்றிய விழிப்புணர்வையும் அரசியல் அக்கறையயும் வளர்க்க முடியுமென்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. தீர்வுப் பொதியை அப்படியே நிராகரிப்பதையும் தனித்தமிழ் ஈழத்தையும் வற்புறுத்தியதன் போக்கில் தேசிய இனப்பிரச்சனையின் சிக்கலான பிற பரிமாணங்களை அவர் கணிப்பி- லெடுக்கத் தவறினார் என்பதும் இங்கு குறிப்பிட வேண்டியது.

**இந்திரன்**

விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற அவரது கருத்தை எவரும் ஏற்றலுங் கூட, விடுதலைப் புலிகளின் பாரிய அரசியற் தவறுகளையும் போராட்டத் தவறுகளையும் குறைந்தபட்சம் விமர்சிக்கவும் அவர் காட்டிய தயக்கம் அவரைப் பற்றிய தவறான ஒரு படிமத்தை கட்டியெழுப்பியது. அவருடைய நியாயமான கருத்துக்களைக் திரித்துக் கூற முயன்ற பேரினவாதிகட்கும் பேரினவாத அரசாங்கத்தின் எடுபிடிகளுக்கும் அது வசதியாக இருந்தது. ஒரு விடுதலைப் போராட்டத்தின் போது தவறுகள் நேர்வது தவிர்க்க இயலாததே. எனினும் இந்தத் தவிர்க்க இயலாமையை மட்டுமே ஆதாரமாக வைத்துத் தவறுகள் விமர்சிக்கப்பட்டுத்திருத்தப்ப- டாவிட்டால் அது விடுதலை இயக்கத்துக்கும் விடுதலை போராட்டத்துக்கும் தீங்கானது என உணராதவர் அவர் ஒருவர் மட்டுமல்ல. தனது கருத்துக்களின் தாக்கத்தை வலுப்படுத்துவது எது என்பதை அவர் தவற விட்டுவிட்டார் என்பதே வருந்தத் தக்க ஒரு உண்மை.

ஒட்டுமொத்தமாக நோக்கினால், குமார் பொன்னம்பலத்தின் அரசியல் 1976க்குப் பிறகு, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி பற்றிய அவநம்பிக்கையாலும் குறிப்பாக அவரது தந்தை ஜி.ஜி. பொன்னம்பலத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இருந்து வந்த பகைமையின் தொடர்ச்சியாகவுமே வளர்ச்சி பெற்றது. 1977 தேர்தலின் பின்பு, பாராளுமன்றப் பதவி பற்றிய அவரது எதிர்பார்ப்புக்கள் மிகவும் குறைந்து விட்டன. எனினும் கூட்டணியின் கையாலா- காத்தனத்தின் கடுமையான விமர்சகராகவே அவர் இருந்தார். 1983 இனவாத வன்முறைக்குப் பின்பு ஏற்பட்ட நிலைமைகளை கூட்டணித் தலைமையை விட நேர்மையாக அவர் அணுகினார் என்பது உண்மை. பாராளுமன்றத்திற்குள் அவர் போயிருந்தால், அவர் எவ்விதம் நடந்திருப்பார் என்பது விவாதிக்கத் தக்கது. அவருடைய அரசியல் ஒரு தனிமனிதருடைய அரசியலாகவே இருந்ததன் விளைவாக, அவரது பங்களிப்பு ஒரு வெகுசன இயக்கத்தைக் கட்டியெழுப்பவோ தென்னிலங்கையில் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு ஒரு போராட்டப் பாதையை வகுக்கவோ உதவ வில்லை. இதற்காக அவர் செயற்படாத எந்த அரசியல் சிந்தனையும் எதிர்ப்பு கருத்து வெளிப்பாடு என்ற எல்லையைத் தாண்டியதில்லை. வெகுசன அரசியலுக்குள் அவரை ஈடுபடுத்தக் கூடிய விதமாக அவருடைய வர்க்க அரசியல், சமூகப் பின்னணி இடமளித்திருக்காது.

குமார் பொன்னம்பலம் ஒரு தமிழ் தேசிய முதலாளிய அரசியல்வாதி என்பது பற்றி நமக்கு ஐயமில்லை. ஆயினும் அவர் ஒரு தமிழ் இனவாதியோ இனவெறியரோ சிங்கள மக்களின் எதிரியோ அல்ல. இந்த உண்மையை சிங்கள முற்போக்குவாதிகள் சிங்கள மக்களுக்கு உணர்த்த வேண்டிய தேவை உள்ளது. இன்று நாட்டைச் சீரழிப்பதும் அதிமுக்கிமானதுமான பிரச்சினை தேசிய இனப்பிரச்சனையே என்பதை ஜே.வி.பி தவிர்ந்த எல்லாக்கட்சிகளுமே ஏற்றுக்- கொண்டுள்ளது போற் தெரிகிறது. ஆயினும் சிங்களப் பேரினவாத அரசியல் அதை வெறுமனே பயங்கரவாதப் பிரச்சினையாகக்காட்டி வந்துள்ளதோடு பெருவாரியான சிங்கள மக்களுக்கு அந்த நோக்கிலேயே தமிழ்மக்களின் பிரச்சனைகளும் முன்வைக்கப் பட்டுள்ளன. இந்த மனத்தடையைத் தகர்ப்பதற்குப் புரட்சிகர ஜனநாயக, முற்போக்குச் சக்திகளால் மட்டுமே இயலும்.

குமார் பொன்னம்பலத்தின் கொலை வெறுமனே தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மிரட்டல் மட்டுமல்ல. அது அடக்குமுறை ஆட்சிக்கு எதிரான ஒவ்வொரு குரலுக்கும் எதிரான கடுமையான எச்சரிக்கையுங்கூட. குமார் பொன்னம்பலத்தின் கொலை மூலம் விடுதலைப்புலிகளையோ தமிழ் மக்களது இனவிடுதலைப் போராட்டத்தையோ முடக்கிவிடலாம் என்று அவரது கொலைக்குக் காரணமானோர் எண்ணினால் அது போன்ற பெரிய தவறுகள் வேறு இராது. அதே வேளை, எல்லாமே போயிற்று என்று தலையிற் கைவைக்கும் தமிழ்ப் பிரமுகர்களும் தமிழ்மக்களது போராட்ட உணர்வின் வலிமையை அறியாதவர்கள்.

இன்றுவரை இனரீதியாகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்ப பட்ட கொடுமைகட்கெதிராகத் தளராது குரல் கொடுத்தோர் உண்மையான மாக்சியவாதிகளே. தமிழ்த் தேசிய இனவிடுதலைக்கான வழிகாட்டலிலும், வழி நடத்தலிலும் அவர்கள் முன்னின்று செய்றபடவேண்டிய தேவை இன்று என்றிலும் பெரிதாக உள்ளது. எதிர்ப்புக்குரலாக மட்டுமல்லாது வெகுசனப் போராட்டச் சக்தியாகவும் மாக்ஸிச லெனினிசவாதிகள் வளர்வதே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கட்கும்மக்களுக்குமான ஒரே நம்பிக்கையாகும். குமார் பொன்னம்பலத்தின் கொலை நமக்கு வழங்கும் பாடங்களில் முக்கியமானதும் அதுவே. ❖❖❖

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமானின் மறைவுக்கு முன்பும் பின்பும்

ம. அழகேசன்

இ.தொ.கா. தலைவர் தொண்டமானின் இறப்பை அடுத்து தொண்டமான் நீண்டநாட்களாக தொழிற்சங்கத் தலைவராகவும், தென்கிழக்காசியாவின் பெரியதொரு தொழிற்சங்கத் தலைவராகவும் நீண்டநாட்களாக எம்.பீ. யாகவும் அமைச்சராகவும் இருந்தவர் என்றும் இரண்டு கட்சிகளின் அரசாங்கங்களிலும் அமைச்சராக இருந்தவர் என்றும் புகழாரங்கள் சூட்டப்பட்டன. பாராளுமன்ற தொழிற்சங்க வாழ்க்கையில் மேற்படி விடயங்கள் நிராகரிக்கப்பட முடியாதவை.

இந்தியாவிலிருந்து இங்கு வந்து இலங்கை அரசியலில் முக்கியபங்கை வகித்திருக்கிறார் என்பது இந்தியர்களாலும் பேசப்படும் விடயமாகிறது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்காக இந்தியத் தலைவர்களின் ஆலோசனைப் படியே இலங்கை இந்தியன் காங்கிரஸ் உருவாக்கப் பட்டது. ஆனால் இது உருவாவதற்கு முன்பு நடேச ஐயரின் தொழிற்சங்க இயக்கமும் அவர் சட்ட சபையில் செய்த போராட்டங்களும் இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரின் வரலாற்றில் முக்கியமான விடயங்களாகும்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் பெரும் எண்ணிக்கையிலான தோட்டத் தொழிலாளர்களை கொண்டதாக இலங்கை இந்தியன் காங்கிரஸ் இருந்தாலும் பெரிய இந்திய வர்த்தகர்களின் நலனையே அடிப்படையாக கொண்டிருந்தது. 1947ம் ஆண்டு பிரஜா உரிமை பறிக்கப்பட்டபிறகு 1950 இல் இலங்கை இந்தியன் காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன் பிறகு தோட்டத் தொழிலாளர்களின் விவகாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு காங்கிரஸ் உள்ளானது. அதாவது பிரஜாஉரிமையை மீளப்பெறுவது உட்பட எல்லா அரசியல் கோரிக்கைகளையும் முதன்மைப் படுத்துவதை விட்டு வெறும் தொழிற்சங்க கோரிக்கைகளை முதன்மைப்படுத்தியே வேலை செய்தது.

இ.தொ.கா. தலைவர் தொண்டமான் நியமன எம்.பியாக இருந்த காலத்திலும் மலையக சமூகத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன என்று கூறமுடியாது. அவரும் அவரின் உறவினர்களும் பல தேயிலை தோட்டங்களுக்கு சொந்தக்காரர்களாக இருந்தனர் என்பதுடன் தொழில் பட்டதாகவே அவரின் தொழிற் சங்கத் தலைமைத்துவம் இருந்தது. அதாவது பெருந்தோட்ட சொந்தக்காரர்களின் சுரண்டல் அக்கறைகளுக்கு நேர் எதிர்மாறாக தொழிலாளர்களின் அக்கறைகளை ஊர்த்திப்பிடித்து தொழிற்சங்க தலைமைத்துவத்தை நிலைநாட்டினார் என்று கூறமுடியாது.

1960 களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்த பத்திரிகை மசோதாவினை எதிர்த்து வாக்களித்தார் தொண்டமான். அதனால் அவ்வரசாங்கம் பிரச்சினைக்குள்ளானது.

பொதுவாகவே தொண்டமான் ஐ.தே. கட்சியின் தலைமையுடனேயே நெருங்கிய தொடர்பை கொண்டிருந்ததுடன் தொடர்ந்து அக்கட்சித் தலைமையின் வர்க்க நலன்களை பாதுகாப்பதில் உறுதியுடன் இருந்து வந்தார்.

1970 - 1977 வரையிலான சுதந்திரக்கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட காணிச் சீர்திருத்தத்தின் கீழ் தொண்டமானும் அவரது உறவினர்களும் அவர்களின் தேயிலை தோட்டங்களை இழந்தனர். அக்கால கட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அடக்குமுறையினால் அதிருப்தியடைந்திருந்த தோட்டத் தொழிலாளர்களை அணித்திரட்டி அப்போது எதிர் கட்சியாகவிருந்த ஐ.தே. கட்சியுடன் சேர்ந்து அதிக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதனால் 1977 ஐ.தே. கட்சி வெற்றிபெறவும் தொண்டமான் வெற்றிபெறவும் வாய்ப்பு அதிகமாகியது.

1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே. கட்சியின் தலைமையிலிருந்த ஜே. ஆர் ஜயவர்த்தன அவரது தாராள திறந்த பொருளாதாரக் கொள்கையினை நிலைநிறுத்துவதற்காக பல மாற்றங்களை செய்தார். அதனால் அதிருப்தியடைந்த இலங்கையின் தொழிலாளர்வர்க்கத்தை பிளவுபடுத்துவதற்கு பல முயற்சிகளை எடுத்தார். இலங்கையின் நன்கு ஸ்தாபனப்பட்டிருந்த தோட்ட தொழிலாளர்களை தொழிலாளர் வர்க்கத்தின் பிரதான ஓட்டத்திலிருந்து பிரித்து வைப்பதில் தொண்டமான் ஜே. ஆருக்கு நன்கு உதவினார் எனலாம். ஜே. ஆரின் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்ததுடன் அவ்வரசாங்கத்திற்கு மிகவும் விசுவாசமாக இருந்தார். குறிப்பாக 1980 பொதுவேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக தோட்டதொழிலாளர்கள் உறுதியான போராட்டத்தில் இறங்காமலிருந்ததற்கு தொண்டமான் காரணமாக இருந்தார். அதாவது ஐ. தே. கட்சியின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்களை அணிதிரளாமல் வேறுவிதத்தில் திசைதிருப்புவதில் கவனமாக இருந்து செயல்பட்டு வந்தார்.

ஐ. தே. கட்சி காலத்தில் வழங்கப்பட்ட ஆண்பெண் சமசம்பளம் பல சம்பள உயர்வுகள் என்பவற்றுக்கு தொண்டமானின் தலைமைத்துவமே காரணம் என்று பேசுபவர்கள் பலர் இருக்கின்றனர். மலையகத்தில் பல பாடசாலைகள் கட்டப்பட்டமைக்கும் சிறிபாத கல்வியல் கல்லூரி உருவாகியதற்கும் ஆசிரிய நியமனம் வழங்கப் பட்டமைக்கும் அவரே காரணமென்றும் நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் கொண்டு வரப்பட்டமைக்கு அவரே காரணம் என்றும் கூறுவர்.

வளர்ச்சியடைந்து வந்த பிராந்திய அரசியல் நிலைமையில் இந்தியாவின் செல்வாக்கு, தமிழ் தீவிரவாத அமைப்புகளின் போராட்டம் என்பன பிரசாவுரிமை பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க ஐ.தே. கட்சியை நிர்ப்பந்தித்தது எனலாம். அதேவேளை ,1980 ஆம் ஆண்டு தோட்டத்துரைமார் சங்க கூட்டத்தில் ஜே. ஆர் ஜயவர்த்தன வெளிப்படுத்திய தோட்டத்தொழிலாளர் தொடர்பான ஐ. தே. கட்சியின் நிலைப்பாட்டை மீண்டும் நிணைவுப் படுத்த வேண்டியுள்ளது. அவர் என்ன நோக்கத்தில் பேசியிருப்பார் என்பது தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்தாலும் பெருந்தோட்டங்களில் சில சீர்திருத்தங்களை அறிமுகம் செய்ய வேண்டிய நிர்ப்பதந்தம் ஐ. தே. கட்சிக்கு இருந்தது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. அந்த நிர்ப்பந்தம் தொண்டமானின் அழுத்தங்களால் ஏற்பட்ட தென்று கூறமுடியாது. ஆனால்



தொண்டமான் ஆட்சியில் பங்கு கொண்ட சூழலில் இடம் பெற்ற சீர்திருத்தங்களுக்காக அவரைச் சென்றடைந்தது என்பதே உண்மையானதாகும். அதேவேளை தொண்டமான் பெரிய அழுத்தங்களை அல்லது போராட்டங்களைச் கொடுத்து மலையக மக்களுக்கென உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார். என்று கூறுவதற்கில்லை. மலையகத்தில் கல்விரீதியாக ஏற்பட்ட சீர்திருத்தங்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் உந்துதலினால் ஏற்பட்டவையே. கல்லூரிகள், பாடசாலை கட்டிடங்கள் என்பவற்றை கட்டுவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் பெருமளவில் உதவியிருக்கின்றன. அவ்வாறு ஐ. தே. கட்சியுடன் நெருக்கமாக இருந்தவர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அமைச்சரானது எப்படி ? என்ற கேள்வியை கேட்டு அவர் ஐ. தே. கட்சியின் வர்க்க நிலைப்பாட்டுடன் ஒத்துப் போனார் என்பதைவிட மலையக மக்களின் நலனுக்காகவவே ஐ. தே. கட்சியுடன் இணைந்திருந்தார் என்றும் அந்த நோக்கத்திலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் இணைந்தார் என்று. சிலர் கதை கூறுகின்றனர். பாராளுமன்ற அரசியலில் முதலாளித்துவ கட்சிகளின் இறுக்கமான நிலைப்பாடுகள் தகர்ந்த நிலைமையில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதுண்டு. அந்த வகையிலேயே எதிர்கட்சியின் தேசிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட தொண்டமான் அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்க முடிந்தது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கையில் அதிக வலதுசாரி போக்கு ஏற்பட்டமை இதற்கு அடிப்படையாக இருந்தது. அரசாங்கத்தை நடத்துவதில் தொண்டமான் கொண்டிருந்த பங்கை குறைத்து மதிப்பிட முடியாது என்பதனால் சிங்கள பேரினவாதிகள். அவர்மீது வசைபாடி வந்தனர். அவர்களை தொண்டமானும் அவ்வப்போது சாடி வந்துள்ளார். அவருடைய கட்சியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக அவ்வப்போது பல திடீர் கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்தை மிரட்டுவது போன்ற நாடகங்களிளில் ஈடுபட்டுள்ளார். ஆனால் அவரையும் மலையகத்தமிழ் மக்களையும் குறிவைத்து செயற்பட்ட சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக அவர் எடுத்த நடவடிக்கைகள் என்ன? சிங்களப் பேரினவாதிகளினால் பாதிப்பு ஏற்படாதவாறு எவ்வாறு நெளிவு சுழிவுடன் நடந்து கொள்வது என்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அதாவது அவர்களை ஏசி திட்டுவார். சில சந்தர்ப்பங்களில் ஏதுவும் நடக்காதது போல் இருந்து விடுவார் 1999 மே தினத்தின் நுவரெலியாவில் சிங்கள வீரவிதான இயக்கம் எடுத்த நடவடிக்கைகளுக்கு துணை போன பொலிஸ் அதிகாரிக்கு எதிராக திரைமறைவில் அரசாங்க உதவியுடன் நடவடிக்கை எடுத்தார். ஆனால் இ. தொ. கா. தலைமை காரியாலய வளவில் நுழைந்து இ. தொ. கா. கொடியை கழற்றி எரித்த சிங்கள தீவிரவாத சக்திகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க முடியாது பின் வாங்கினார்.

எனவே இனவாதத்தை எதிர்ப்பதிலும் அவரிடம் இரட்டைத் தன்மை இருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த இட்டைத் தன்மையை தந்திரோபாயம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் உண்மையாகவே தனது வர்க்க நலனுக்கு ஏற்ற சமரசப் போக்கையே தொண்டமான் கடை பிடித்தர் ஜே. ஆரோ, பிரேமதாசாவோ இனவாதம் பேசாமல் இல்லை. ஆனால் விஜயதுங்காவின் இனவாதமே அவருக்கு பிரச்சினையாக இருந்தத. அதாவது தானும் தனது கட்சியும் அரவணைக்கப் படாதபோதே அவரால் இனவாதத்தை முரண்பாடாக பார்க்க முடிந்தது." ஜே. ஆரும் பிரேமதாசவும் அவரை அரவணைத்தனர். விஜயதுங்க அரவணைக்க மறுத்ததனாலேயே அவருடன் முரண்படுவதாக தொண்டமான் காட்டிக் கொண்டார்.

இனவாதத்திற்கு எதிராக மலையகத்தமிழ் மக்களை அணித திரட்டுவதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை 1971 ஆம் ஆண்டிற்கு பிறகு தோட்டத்தொழிலாளர்களின் போராட்டப் பாரம்பரியத்தை பலவீனப்படுத்துவதற்கு தொண்டமானின் 'மெதுவான' அனுகுமுறை அடிப்படையாக இருந்தது. பெரியதொரு தொழிற்சங்கத்தின் தலைமையை தன்வசம் வைத்துக் கொண்டு தொழிலாளர்களை அவர்களின் உரிமைகளுக்காக போராட்டத்தில் இறக்காமல் பேசித்தீர்ப்பது பிரார்த்தனை செய்வது போன்ற அனுகுமுறையை கையாண்டார். இதனால் இன்று பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கு எதிராக உறுதியான போராட்டங்களை வெல்வதற்கு மலையகத்தொழிற் சங்கங்கள் வலுவில்லாமல் இருக்கின்றன.

> **தொண்டமான் ஆளும் வர்க்க கூட்டாளியாகவே எப்போதும் இருந்து வந்தவர். அதேவேளை தொழிலாளர்களின் தலைவர் என்ற மாயையையும் நிலை நிறுத்திக் கொண்டவர்.**

போராட்டங்களை நடத்தாமல் பேசித்தீர்க்கலாம் என்பது சிறந்த பேரம் பேசும் அனுகுமுறை என்று சிலர் கூறப்பார்க்கிறார்கள். அதிலிருந்து தொண்டமான் மலையகத் தமிழ் மக்களினது தோட்டத்தொழிலாளர்களது சிறந்த பேரப் பேச்சாளராக இருந்தாரா என்ற வினா எழுகிறது. கடந்த வருடம் நடைபெற்ற பசறை தோட்ட வேலை நிறுத்தம் அதில் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் உற்று நோக்கினால் தொழிற்சங்க வரலாற்றில் மிகவும் பலவீனமான போராட்டமாக கொள்ள வேண்டியிருக்கிறது.

சிறீபாத கல்வியியல் கல்லூரியை ஒரு தனித்தமிழ் கல்லூரியாக நிலைநாட்டும் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தாலும் அதனை நடைமுறையில் சாதிக்கமுடிய வில்லை. அவ்விடயத்தில் ஆளும் வர்க்கத்துடன் அவர் சமரசம் செய்தது மட்டுமன்றி சிங்கள இனைவாதத்திற்கு இணங்கி நடந்து கொண்டார்.

மாத சம்பளத்தை பெற வேண்டும் என்பது இன்னும் மிகவும் புரட்சிகரமான கோரிக்கையாகவே இருக்கிறது. அரசாங்கத்தின் கீழ் தோட்டங்கள் இருந்தபோதும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. தனியார் கம்பெனிகளிடம் முறையான கூட்டு ஒப்பந்தம் கூட செய்யப்பட வில்லை. சம்பள உயர் விடயத்திலும் வழுவல் போக்கைக் கடைப்பிடித்து பின்வாங்கிக் கொண்டார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தோட்டப்புற உள்ளககட்டமைப்பு என்ற அமைச்சை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடத்து பெற்றுக் கொண்டதாக ஒரு கதை கூறப்படுகிறது. தோட்டங்களில் பாதைகள் போன்றவைகள் முறையாக அமைக்கப்பட வேண்டும் என்பது உலகவங்கியின் பெருந்தோட்டத்துறையை மீளப் புனரமைத்தல் திட்டத்தில் முக்கியமான சிபார்சாக இருக்கிறது. அந்த சிபார்சின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு அமைச்சாகும். அந்த அமைச்சின் கீழ் தோட்டத் தொழிலை சிறப்புறச் செய்வதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா ? தொழிலாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமா என்பது அடிப்படையான வினாக்களாகின்றன. எனவே தொண்டமானின் முழுப் பங்களிப்பும் தொழிலாளர்வர்க்க நலன்களில் இருந்து விமர்சன ரீதியாக நோக்கப்படுவது அவசியமாகும்.

இவ்வாறு தொண்டமான் மறையும் வரையுள்ள பொதுவான விடயங்களை பார்க்க முடியும் குறிப்பான விடயங்களை விரிவாக பார்ப்பதை கைவிடாமல் அவற்றை ஒத்திவைப்போம்.

அவரின் மறைவிற்கு பின்பு அவரின் பேரன் அவரது தொழிற்சங்க அரசியல் வாரிசாக்கப்பட்டுள்ளார். இது குறித்து பேராசிரியர் சந்திரசேகரம் "மலையகத்தை நிமிர்த்திய தொண்டமான் அவருக்கு பின்பு ஆறுமுகம் தொண்டமான் எனும் பொருத்தமான வாரிசை மலையகத்திற்காக தந்திருக்கிறார்" என்று கூறியிருக்கிறார். இதுபற்றியும் எதிர்காலம் பற்றியும் பிறிதொரு கட்டுரையில் விரிவாக பார்க்கலாம்.

♦♦♦

நன்றி - நூலகத்திட்டம்



### தெரி ஈகிள்ற்றன் கருத்துரைகள்

# வரலாறுகளில் ஒழுங்கேதும் இல்லையா ?

பின்னவீனத்துவச் சார்பானவர்கள் வரலாற்றை இரு வகைப்படுத்தி, பெருவரலாறு என்றும் சிறுவரலாறு என்றும் பேசுவதுண்டு. இவற்றுள், பெருவரலாறு என்பது, ஒரு பெருங்காப்பியம்போல தொடக்கம், வளர்ச்சி, இறுதி கொண்ட தொடர்கதைபோல அமைப்புப் பெற்று விளங்குவது. மனித வரலாற்றை அப்படிப்பட்ட ஒரு கட்டுக்கதை போலப் புனைந்து, ஏதோ ஒரு குறிக்கோளை நோக்கி வரலாறு சென்றுகொண்டிருக்கிறது என மாக்சியம் கருதுகிறது என்று 'பின்னவீனர்கள்' சிலர் மாக்சியத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முயல்வதுண்டு. இந்தக் குற்றச் சாட்டில் ஏதாவது நியாயம் உண்டா? இது பற்றிப் பேராசிரியர் தெரி ஈகிள்ற்றன் (Terry Eagleton) தெரிவிக்கும் கருத்துகளை அறிந்து கொள்வது விடயத் தெளிவுக்கு உதவும்.

சமதருமமானது ஒரு வகை இலட்சியத்தை அதாவது நீதியும் விடுதலையும் பகுத்தறிவும் வாய்ந்த சமூக ஒழுங்கு பற்றிய கருத்தினை முன்வைக்கிறது என்பது உண்மைதான். ஏன், புரட்சிப் போக்கு மிக்க பின்னவீனர்கள் கூட அவ்வித நிலைப்பாட்டை உடையவர்கள்தான். அது எவ்வாறாயினும், சிலர் கருதுவது போல பெருவரலாற்றுக் கட்டுக்கதைகளிலே சமதருமிகள் மயங்கிக் கிடக்கிறார்கள் என்பது உண்மை அல்ல. மனிதர்களை மீறிய அதீதமான நியதிகளைக் கொண்ட, 'பெருவரலாறு' என்னும் ஒன்று உண்டு என்றவர்களைக் காள் மாக்சே கேலி பண்ணி இருக்கிறார்.

ஒரு வகையான பின்னவீனத்துவம் வரலாற்றினை இடையறாத மாற்றங்களும் குழப்பங்களும் முறிவுகளும் கொண்ட தொடர்ச்சியற்ற அலம்பல் சிலம்பலாகவே கொள்கிறது. இந்தக் கொள்கை கடுமுனைப்பாக அழுத்தப் பட்டு, அபத்தமான முடிவுகளுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. அப்பொழுது எல்லா வரலாறுகளுமே தனித்தனி நிகழ்வுகளின் கும்பலாக இடிந்து நொறுக்கிக் குவிக்கப் படுகின்றன. அந்த நிலையில் வரலாறு என ஏதுமே இல்லாத ஒரு நிலமை தோன்றுகிறது.

உண்மை என்ன ? பழமைக்கும் புதுமைக்கும் தொடர்பே இல்லையா ? ஆதி மனிதர் ஒருவருக்கும் நமக்குமிடையிலே அடிப்படையான பொதுப்பண்புகள் பல இருக்கவே செய்கின்றன. வரலாற்றுப் போக்கிலே அதிகம் மாறிவிடாத பொருள் மயமான உருவமைப்புக் கொண்ட உடல்கள், ஆதி மனிதருக்கும் நமக்கும் பொதுவானவை. இது மிகவும் முக்கியமானது. வேறொரு பிராணி நம்முடன் பேச முடியுமானால், பொருளியல் உழைப்பில் ஈடுபட முடியுமானால், நம்முடன் பாலுறவு கொள்ள முடியுமானால், கலைப்படைப்புப் போன்ற ஒன்றினை ஆக்க முடியுமானால், துன்பம், விகடம், சாவு என்பவற்றை அனுபவிக்க முடியுமானால், இந்த வாழ்வியல் உண்மைகளிலிருந்து ஏராளமான அறங்களையும், அரசியல்களையுங்கூட நாம் கற்றுக் கொள்ளலாம். உடல் வடிவங்கள் ஒத்தவையாய் இருப்பது ஒன்றைக் கொண்டே, மரியாதை, பரிவு, வெறும் வேடிக்கைக்காக மற்றொருவரின் மண்டையை உடைக்காமல் விடுவது போன்ற மனிதப் பண்புகள் அவர்களுக்கு இருக்கும் என்று உய்த்தறியலாம்.

மற்றைய உயிர்களிடத்தும் அவ்வாறு பரிவுடன் நாம் நடந்து கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவற்றை மணம் முடிக்கவோ, அவற்றுடன் இணைத்து புத்தகம் எழுதவோ புரட்சி இயக்கம் நடத்தவோ நாம் எண்ணமாட்டோம். பேசவும் உழைக்கவும் தெரிந்த பிராணிகளுக்கு, மிக எளிமையானதாய் என்றாலும், ஏதோ ஒரு வகையான அரசியலும் இருக்கும் என்று கருதலாம். அப்படிப்பட்ட உயிரினங்கள், தம் உழைப்பையும் சமூகத்தையும் பாலுறவுகளையும் ஒழுங்கு படுத்தும் ஆற்றல் கொண்டனவாய் இருக்கும்.

ஆனால் இவை போன்ற விதங்களில் யோசிப்பது இப்போதெல்லாம் நாகரீகமாகக் கொள்ளப்படுவது இல்லை. ஏனென்றால், அவ்வித யோசனைகள், செயற்கைப் பண்புகளை விட இயற்கைப் பண்புகளுக்கே (அதாவது உயிரியலுக்கே) முதன்மை தருவனவாய்த் தோன்றுகின்றன. 1970 களில் ஒரு காலகட்டத்துக்குப் பிறகு, சில வகையான பின்னவீனத்துவங்கள், உயிரியல் அக்கறைகளையும், சில வேளைகளில், பொருளியல் அக்கறைகளையும் ஏளனம் செய்யத் தலைப்பட்டன. அவற்றைத் துடைத்து நீக்க முயன்றன. பண்பாடு பற்றிப் பொருள்மய முறையிலே பேசத் தொடங்கி, பொருள்கள் (அதாவது உடல்கள்) பற்றிய பண்பாட்டுப் போக்கிலே பேசுவதில் வந்து முடிந்தன. நம் உடல்கள் பொருள்மயமானவை என்பது கண்கூடு. இந்த உடல்பற்றிய அக்கறையைப் பின்னவீனத்துவம் கடுமையாகப் பெரிதுபடுத்திற்று. உடல் பொருளாகையால் அவ்வுடலைச் சந்தேகத்துடன் நோக்கிய அதே வேளை உடலின் தனித்தன்மை பற்றி ஈடுபாடும் பக்தியும் கொண்டது. இதுதான் விசித்திரம் அரிஸ்ற்றோற்றிள் ஐக்குவினஸ் போன்ற மரபுவழி அறிஞர்களைப் பொறுத்தவரையில், மனிதர்களின் தனித் தன்மைக்குக் காலாய் இருப்பவை உயிர்கள் அல்ல, உடல்கள் தான். ஆனால், பின்னவீனத்துவமோ, மனிதப்பொது இயல்பு பற்றிய பேச்சு எல்லாமே கருத்துமுதல் வாதம் என்று வாதிட்டது. இந்த எண்ணம் தவறானது. ஏனென்றால், மனிதப் பொது இயல்பு பற்றிய மாக்சியப் பார்வை, பொருள்மயமானதே அல்லாமல், கருத்துமயமானது அல்ல.

### தமிழ் வடிவம் முருகையன்

மனிதப் பொதுமைகளைப் பல்வேறு பண்பாடுகளும் பல்வேறு விதங்களில் வடிவமைத்துக் கொள்கின்றன என்பது உண்மையே. சில மனிதர்கள், கிறிக்கெற் போன்றதொரு விளையாட்டில் ஈடுபட்டுள்ளார்கள் என்று நாம் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அவர்கள் மழையைப் பெய்யப் பண்ணும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக் கூடும். இவை போல்வன பண்பாட்டு வேறுபாடுகளினாலே தோன்றக் கூடிய மயக்கங்கள். பண்பாட்டுப் பொதுமை என்பது வேறோரு விதத்திலும் விபரீதமாகலாம். குறித்ததொரு பண்பாட்டுக் குழுவினர்தம் சொந்த நிலைப்பாடுகள் மட்டுமே உலகெங்கும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று கருதி ஏனைய சார்பினர் எல்லாரையும் அடக்கி ஆளமுற்படலாம். இது நாசகரமானதொரு கருத்தியலாகும். அத்துடன், பல நூற்றாண்டு காலமாக நிலைத்ததொரு பொதுப் பண்புதான் மிக முக்கியமானது என்று கருதுவதும் சரியல்ல. எந்த வகையில், எது முக்கியமானது என்பதே கேள்வி நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. பொதுமைகளுக்கு எதிரான தன் வாதங்களை அளவு மீறிப் பொதுமைப்படுத்துவதிலே பின்னவீனத்துவம் பிடிவாதமாகி இருக்கிறது.

அளவு மீறி வரலாற்றுப் பொதுமை காணும் பின்னவீனத்துவம் அளவு மீறிப் பொதுமையை நிராகரிக்கவும் செய்கிறது. பின்னவீனத்துவம் காட்டும் வரலாறு விறுவிறுப்பானது. ஆனால் ஒற்றைப் பரிமாணம் கொண்டது. காலத்தின் பல்விதப் பன்பினைப் பிசைந்து நசுக்கி, உடனடித் தருணங்களையும் நிகழ்வுத் துண்டங்களையும் கணங்களையும் மாத்திரமே பிரதானப் படுத்துவது; காலத்தின் நெடிய ஓட்டங்கள் கணிப்புக்கு உரியன அல்ல என்று சாதித்து, ஒதுக்குவது. ஆனால், இந்த விடயத்தில் மாக்சியம் தாரளமானது. அது உடனடித் தருணங்களைப் போலவே நெடிய நிகழ்வுத் தொடர்களையும் பரிசீலனை செய்கிறது.

பெருவரலாறுகளைக் கவனித்துக் கொண்டிருந்தால், சிறுவரலாறுகள் எல்லாம் வெறும் பக்கவிளைவுகள் மாத்திரமே என்று முடிவு கட்ட வேண்டி வருமோ? இது தான் பின்னவீனத்துவத்தின் அச்சம் போலும். ஒரு வேளை, தொடர்ச்சி என்ற பேச்சே பின்னவீனத்துவத்துக்குக் கட்டோடு பிடிக்காதோ? தொடர்ச்சி என்றதும், 'புனிதமானதொரு' மரபும் முன்னேற்றம் பற்றிய எண்ணங்களும் கிளம்பிப் பேயாட்டம் போடும் என்று பின்னவீனத்துவம் அஞ்சுகிறது போலும். சமதருமச் சிந்தனையில், பெருவரலாற்று நோக்கொன்று இருப்பது மெய்தான். இது பெரிய சங்கடமாகத் தான் சிலருக்குத் தோன்றும். பின்னவீனர்கள் நம்புவது போல, வரலாற்றில் எந்த விதமான தொடர்ச்சியும் இல்லை என்றால், தொல்லையே இல்லை. ஆனால் இப்படி நம்புவது உலகில் இதுவரை வாழ்ந்து முடிந்தவர்களுக்கும் இப்போதும் உயிருடன் உள்ளோரிற் பலருக்கும் இழைக்கும் ஒரு துரோகமாகும். வரலாறுபற்றி எண்ணும் சமதருமிகளை மிகவும் உறுத்தி வருத்தும் உண்மை ஒன்று உண்டு. எல்லாக் காலங்களிலும், மனிதரை மனிதர் மசித்து மிதித்து ஒடுக்கும் நிலைமை தான் பெரிதும் காணப்படுவது. வரலாறென்பது, வெறும் தற்செயலான தருணங்களின் சேர்மானம் தான் என்றால் மறுபடியும் மறுடியும் இவ்விதமான உறிஞ்சல்களும் சூறையாடல்களும் கொடுமைகளும் மாத்திரமே ஏன் திரும்பத்திரும்ப வரவேண்டும்? அமைதியும் இன்பமும் நிலவும் கட்டங்கள் மிகவும் அருமை பெருமையாக, எப்போதேனும் தோன்றி மின்னி மறைந்து போகும் நெருப்புக் கொள்ளிகளாக மாத்திரம் இருப்பதேன்? சிலர் கருதுவதுபோல, உலகத்தில் நன்மையும் தீமையும் மாறி மாறி வருவதுதான் இயல்பென்றால், புள்ளியியற் சராசரிகளின் நியதிப்படி, மகோன்னதமான காலப் பகுதிகளும் இருண்ட காலப்பகுதிகளும் ஏறத்தாழச் சரிசமமான இடைவெளிகளில், சரிசமமான எண்ணிக்கைகளில், நேர்ந்திருக்க வேண்டும். ஆனால். உண்மை அப்படியாக இல்லை. அரசியலும் அறநெறியும் கருத்தியல்களும் உலக வரலாற்றிலே சீரையும் சிறப்பையும் நிலைநாட்டும் ஆற்றல் அற்றவையாகத்தான் காண்படுகின்றன. அதிலும் நாம் வாழும் காலம், உலக வரலாற்றிலே கொடுமைகளின் உச்சங்களைக் கொண்ட ஒன்றாகத்தான் உள்ளது. வெளிச்சம் என்பதே இல்லை என்று அடித்துச் சொல்லிவிட முடியாது தான். ஆனால், நாம் காணும் வெளிச்சங்கள் மின்மினி போல உடனே மறைந்து போகிறவையாகத் தான் உள்ளன. இது ஏன்?

சுரண்டல்களும் சூறையாடல்களும் துன்பதுயரங்களும் இடையறாது தொடர்வது ஒரு வகைப் பெருவரலாறுபோல அல்லவா தோற்றுகிறது ! இந்தப் பெருங்கதை எங்கேனும் போய் முடியுமா ? அல்லது முடியவே முடியாதா ?

மனித நலம் பற்றிச் சிந்திக்கும் எவரிடமிருந்தும் எழக்கூடிய கேள்விகள் இப்படிப்பட்டவை.


❖❖❖

(ஆதாரம் : இலூஷன்ஸ் ஓ´வ் போஸ்ற்மொடேணிஸம் தெரி ஈகிள்ற்றன்)

# கம்யூனிஸ்ட் இயக்கத்தில்

## தோழர் சண்

### பெப்ரவரி 8 அவரது, 7வது நினைவு தினம்



**தோழர் நா. சண்முகதாசன்** 1993ம் ஆண்டு பெப்ரவரி 8ம் திகதி தனது 74 வது வயதில் இயற்கை எய்தினார். இலங்கையின் இடதுசாரி இயக்க பரப்பில் குறிப்பாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஐம்பத்தி மூன்று ஆண்டுகள் கடும்பணியாற்றி தனது பல்கலைக் கழகப் பட்டப் படிப்பை முடித்த கையோடு கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர அரசியல் ஊழியராகத் தன்னை இணைத்துக் கொண்ட தோழர் சண் தனது இறுதி நாள்வரை மாக்சிச லெனினிசத்தை முன்னெடுத்து வந்த ஒரு உறுதிவாய்ந்த கம்யூனிஸ்டாக வாழ்ந்து வந்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியர் என்ற நிலையில் ஆரம்பித்து அரசியல் தொழிற் சங்க வெகுஜன இயக்கங்களில் ஒருவராகிக் கொண்டார். இலங்கையின் தலைநகரத் தொழிலாளர்களையும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும் தொழிற்சங்க அமைப்புகளில் அணிதிரட்டுவதிலும் அவர்களது பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுத்து வந்ததிலும் தோழர் சண் முன்னணித் தலைவராக இருந்து வந்தார். அதற்கு அடிப்படையாக அமைந்தது அவரது மாக்சிச லெனினிச அரசியல் இலட்சியமாகும். அதனால் எந்தவொரு தொழிற்சங்கப் போராட்டத்தின் போதும் முதலாளிகளுக்கோ ஆளும் வர்க்கத்திற்கோ இம்மிளவும் விட்டுக்கொடுக்காது தொழிலாளி வர்க்கத்தின் பக்கத்தில் உறுதியாக நின்று வந்தார். இன்று கூட்டுத் தாபனங்களிலும், தனியார் துறைகளிலும் தொழிலாளி வர்க்கம் வென்றெடுத்து அனுபவிக்கும் பல உரிமைகள் சம்பள உயர்வுகள் போன்றவற்றை தொழிற் சங்கப் போராட்டங்கள் மூலம் பெற்றுக் கொள்வதற்கு தோழர் சண் வழங்கிய தலைமைத்துவம் இன்றும் தொழிலாளர்களால் நினைவு கூரப்படுகின்றது.

மேலும் 1960ம் ஆண்டின் ஆரம்பத்துடன் சர்வதேச சம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட மாபெரும் தத்துவார்த்த போராட்ட விவாதத்தில் தோழர் சண் இலங்கையில் மாச்சிசம் லெனினிசத்தைப் பாதுகாத்து முன்னெடுப்பதில் சரியான தருணத்தில் தலைமைப் பாத்திரத்தை வகித்துக் கொண்டார். மேலும் மாசேதுங் சிந்தனையை மாக்சிசம் லெனினிசத்தின் வளர்ச்சியாக முன்னெடுப்பதிலும் அவரது பாத்திரம் முன்னணியானதாகும். நவீன திரியுவாதத்தையும் முதலாளித்துவப் பாராளுமன்றப் பாதையையும் அம்பலமாக்கி அவற்றின் வெறுமையையும் ஏமாற்றையும் தெளிவாக்கியதில் தோழர் சண் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தலைமைப் பாத்திரத்தை வகித்தார். அதன் மூலம் 1964 -1971 வரையான காலப் பகுதியில் இலங்கையின் அரசியல் களத்தில் புரட்சிகர எழுச்சி தோன்றி முன்செல்வதற்கு தனது அதி உயர் பங்களிப்பை வழங்கினார்.

இக்கால கட்டத்தில் தெற்கில் பல தொழிற்சங்கப் போராட்டங்கள் இடம் பெற்றன. அவற்றுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களும் முன்சென்றன. மலையகத்தில் தீரம் மிக்க வேலை நிறுத்தங்கள் வெடித்து தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வுகளை வெளிக்கொணர்ந்து நின்றன. அதே வேளை வடபகுதியில் சாதி ஒடுக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான வெகுஜனப் போராட்டம் புயலாக வீசி நின்றது. அக் காலத்தில் தோழர் சண் கட்சியினதும் தொழிற்சங்க இயக்கத்தினதும் தலைமைப்பாத்திரத்தில் இருந்து தனது ஆற்றல் முழுவதையும் பயன் படுத்திக் கொண்டார். இவை அனைத்தினதும் செழுமையான அனுபவங்கள் புதிய தலைமுறையினருக்கு உரியவாறு வழங்கப்படுவது வரலாற்றின் தேவையாகும்.

> இலங்கையின் தலைநகரத் தொழலாளர்களையும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும் தொழிற்சங்க அமைப்புகளில் அணிதிரட்டுவதிலும் அவர்களது பொருளாதாரக் கோரிக்கை-களுக்கான தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுத்து வந்ததிலும் தோழர் சண் முன்னணித் தலைவராக இருந்து வந்தார்.

தோழர் சண் மிகுந்த அர்ப்பணிப்புடன் இலங்கையின் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சிறந்த தலைமைப் பாத்திரம் வகித்து வந்துள்ளார் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் அவரது தலைமைத்துவத்தின் தவறுகளால் குறைபாடுகளினால் ஏற்பட்ட பின்னடைவுகள் பற்றியும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். அத்தகைய பக்கம் பார்க்கப்படுவது வளர்ந்து வருகின்ற எந்தவொரு மாக்சிச லெனினிசக் கட்சிக்கும் அவசியமானதாகும். தனி மனிதர்களாக இருந்து கொண்டு கடந்த காலத்தின் எழுச்சிக்குரிய நாட்களை மீள் நினைவு கூர்ந்து கொள்வதால் மட்டும் மாக்சிச லெனினிச வாதிகளுக்குரிய வரலாற்றுக் கடமையை செய்து விடமுடியாது. தோழர் சண் மாச்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனை அடிப்படையிலான ஒரு கட்சினையும் அதன் தலைமையிலான புரட்சிகரப் போராட்டப் பாதையையும் மனமார விரும்பினார். ஆனால் அவரால் அந்தப் பணியில் வெற்றி பெற முடியவில்லை. அது ஏன் என்பது சரியான மாக்சிச லெனினிச மாசேதுங் சிந்தனை வழிநின்று அக விருப்பு வெறுப்பு இன்றி ஆராயப்பட வேண்டும். அதன் மூலம் தோழர் சண்ணின் தவறுகள் குறைபாடுகளையும் மதிப்பிட்டுக் கொள்ள முடியும். இது சண் என்ற தனிமனிதர் பற்றிய ஒன்றாக அன்றி மாக்சிச லெனிசத்தை முன்னெடுத்த ஒரு தலைவர் என்ற அடிப்படையில் பார்க்கப்பட வேண்டும். அதன் மூலம் மறைக்கப்பட்டுள்ள தோழர் சண்ணின் வரலாற்றுப் பாத்திரம் வெளிக் கொணர முடியும். அது வளரும் மாக்சிச லெனினிச இயக்கத்திற்கும் பலம் சேர்ப்பதாகவும் அமையும். தோழர் சண்முகதாசன் என்ற மாக்சிச லெனிசவாதியின் இலட்சியங்களை புதிய அரசியல் யாதார்த்த சூழலுக்கு ஏற்ப விருத்தி செய்து முன்னெடுப்பதற்குரிய சிறந்த வழியுமாகும். அவரது பெயரில் மாச்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனையை சொல்லாலும் செயலாலும் வாழ்க்கை முறையாலும் முன்னெடுப்பதே அவரது நினைவுக்கு நாம் வழங்கும். உயரிய மதிப்பாக அமைய முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



# பாலியல் வல்லுறவுக் கொலைகளுக்கு நீதி வழங்குவது யார் ?

கடந்த 28-12-99 அன்று இரவு புங்குடுதீவு 10ம் வட்டாரத்தில திருமதி ச. சாரதாம்பாள் (வயது 21) என்னும் ஒரு பிள்ளையின் இளம் தாய் நான்கு மனித மிருகங்களால்குதறிக் கொலை செய்யப்பட்ட செய்தி மீண்டும் குடாநாட்டை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. வடக்கு கிழக்கிற்கு இது போன்ற பாலியல் வல்லுறவுக் கொலை புதியவை அல்ல. இப் படுபாதகச் செயலுக்கு ஆளாகிய பெண்களின் பெயர் வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

சாரதாம்பாளை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி குதறிக் கொலை செய்த மனித மிருகங்கள் புங்குடுதீவில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் என்றே அறியப் படுகிறது. மேற்படி ஓநாய்களில் இருவரை சாரதாம்பாளின் சகோதரன் அடையாளம் காட்டிய பின்பும் இதுவரை இப் பாலியல் வல்லுறவுக் கொலை சார்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்பது தான் கவனத்திற்குரியதாகும். உடன் விசாரணை நடாத்தும் படி ஒரு பெண் என்ற நிலையில் இருந்து கொண்டே ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தார். அது வெறும் கண்துடைப்பு மட்டுமே. நீதியும் நியாயமும் எங்கே கிடைக்கப் போகிறது. ஒரு பெண்ணின் அடிப்படை மனித உரிமை அப்பட்டமாகவே புதைக்கப்பட்டுள்ளது. இது சாரதாம்பாளுக்கு மட்டுமல்ல அனைத்து தமிழ்ப் பெண்களுக்கும் மறுக்கப்பட்டுள்ள நீதியுமாகும். சாரதாம்பாள் போன்று கொடிய பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படும் இளம்பெண்கள் உயிர் தப்புமிடத்து தமக்குரிய நீதியை நிலை நாட்ட தாங்களே தீர்ப்புக் கூறுபவர்களாக மாறிக் கொள்வதைத்தவிர வேறு மார்க்கம் இன்றைய நிலையில் இருக்க முடியாது என்பதே யதார்த்தமாகக் காணப்படுகிறது. அத்தகைய நிலையில் பெண் போராளிகள் பல முறைகளில் தோன்றுவதை எந்தச் சட்டமும் நீதியும் அல்லது போதனைகளும் உபதேசங்களும் தடுக்க முடியாது.

# யங்கியே திரும்பிப் போ !

கடந்த நவம்பர் 18ம் திகதி கிரேக்க நாட்டின் தலைநகரான ஏதென்ஸில் லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கோபாவேசத்துடன் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். யங்கியே திரும்பிப் போ! என்பது தான் பிரதான சுலோகமாகக் காணப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் அங்கு விஜயம் செய்த போதே மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். தொழிலாளர்களும் மாணவர்களும் ஏனைய மக்களும் நடாத்திய இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க பத்தாயிரத்திற்கு அதிகமான விஷேச கலகத் தடுப்பு பொலிசார் சேவையில் ஈடு படுத்தப்பட்டனர். இருந்தும் மக்களின் அமெரிக்க ஏகாதியத்திய எதிர்ப்பு கோபாவேசத்தை அடக்க முடியவில்லை.

குறிப்பிட்ட திகதியில் இருந்து ஒருவாரம் கிளின்டனின் விஜயம் பின் போடப்பபட்ட போதிலும் திட்டமிட்ட மூன்று நாள் தங்கி இருத்தலைக் கைவிட்டு 24 மணி நேரத்தில் திரும்ப வேண்டியதாயிற்று. கிரேக்கத்தின் அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள் தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள் ஒன்றிணைந்தே இவ் எதிர்ப்பை வெற்றிகரமாக முன்னெடுத்தனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் கோசோவாவில் தலையிட்டமை, யூகோஷ்லோவியாவைத் தாக்கியமை, துருக்கியுடன் இணைந்து ஐரோப்பிய பாதுகாப்பு என்னும் பெயரில் செயல்படுவது போன்ற வற்றுக்கு எதிராகவும் தமது பிரதான எதிரிஅமெரிக்கா என்ற நிலையிலுமே மேற்படி கிளின்டன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கிரேக்க மக்களால் நடாத்தப்பட்டது. யங்கியே திரும்பிப் போ! என்னும் முழக்கம் மீண்டும் உலக அரங்கில் ஒலிக்க தொடங்கி விட்டதையே இது காட்டுகிறது.

# சந்திரசேகரம் என்ன செய்வார்

தன்னுடைய கட்சியின் பாதுகாப்பிற்காகவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்திருப்பதாக கூறிய மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ. சந்திரசேகரம் கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே. கட்சி வேட்பாளர் ரணில், விக்கிரமசிங்ஹவை ஆதரித்தார். அதனால் அவரது பிரதியமைச்சர் பதவியை இராஜினமா செய்தார்.

கோட்பாட்டு ரீதியாகவே ஐ.தே. கட்சியை ஆதரிப்பதாக கூறி பிரசாரம் செய்தார். மலையக மக்களின் நிலையைப் பேணக்கூடிய கோட்பாடு ஐ.தே. கட்சியிடம் இருப்பதாக கூறுவதற்கெல்லாம் சந்திரசேகரத்திற்கு துணிவு வந்தது ஆச்சரியத்தை தந்திருக்க முடியாது. அவர் சிறையிலிருந்து வெளியே வருவதற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் தயவும் சாதகமானது. அவரது சந்தோசத்தையும் பெற்றவராச்சே சந்திரசேகரம். மலையக மக்கள் முன்னணியில் அண்மையில் ஒட்டிக்கொண்டு மாகாணசபை உறுப்பினராகிய வடபகுதியை சேர்ந்த சட்டத்தரணியும் ஐ.தே. கட்சியுடன். நெருங்கியிருந்த வரலாற்றை கொண்டவர். ஐ.தே. கட்சியின் டிக்கற்றில் முன்பு தேர்தலில் போட்டியிட்டவர் என்றும் தெரியவருகிறது. மலையக மக்கள் முன்னணியை ஆரம்பித்த ஜி.டி. தர்மலிங்கத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டவர்களுக்கு வெளிச்சம். ஐ.தே. கட்சி ஜனாதிபதி வேட்பாளர் வென்றுவிடுவார் என்று எதிர்பார்த்தார். வென்றால் ஐ. தே. கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து முழு அமைச்சர் பதவியை பெற்றுவிட ஆவலாய் இருந்தார். பாவம் அவரின் கனவு நிஜமாக வில்லை.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மீண்டும் அவர் எம்பியாக தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் இல்லை. அதனால் கூட்டணிகளை அமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறார். ஐ. தே. கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அக்கட்சியின் தேசியயப்பட்டியலில் போட்டியிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. வாழ்க அவரது மலையக தேசிய தத்துவம் ! அவர் தொடர்ந்தும் எம்பியாகவே இருப்பாராக ! முழு அமைச்சர் பதவியையும் பெறுவாராக.

மலையக மக்களுக்கு தூரநோக்குடைய நேர்மையான தலைமைத்துவம் தேவைப்படுகிறது. ஆனால் தலைமைத்துவம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றி தங்களை வளர்த்துக் கொள்ளும் அரசியல் மோசடிக் காரர்களை மலையக மக்கள் நிராகரிது சரியான தலைமைத்துவங்களைத் தோற்றுவிப்பார்கள்

# லிடஸ்டேல் வேலை நிறுத்தம்

இராகலை லிடஸ்டேல் தோட்டத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் தோட்டநிர்வாகம் இழுத்தடித்து விடுவதால் நிலைமை மோசமாகி வருகிறது. ப்றீலங்கா தோட்டக் கம்பெனியின் கீழ் இயக்கப்படும் மேற்படி தோட்டத்தில் வேலை நிபந்தனைகளையும் வழி முறைகளையும் தோட்ட நிர்வாகம் இறுக்கமாக்கி வருகிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு உரித்தான பங்குப்பத்திரங்களை இன்னும் வழங்கவில்லை. ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் அறக்கட்டளை நிதி என்பனவை கிரமமாக, திணைக்களங்களில் வைப்பு செய்யப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுவருகிறது.

தேயிலை செடிகளை கவ்வாத்து செய்யும் போது வழமையை விட கூடிய உயரத்தை வைத்து கவ்வாத்து செய்ய வேண்டும் என்றும் அதிக எண்ணிக்கையான மரங்களை வெட்ட வேண்டும் என்றும்கடுமையான நிபந்தனையை தோட்ட நிர்வாகம் வதித்திருக்கின்றமையே. உடனடியான காரணமாக இருக்கிறது. கூடிய உயரத்தில் வைத்து தேயிலை செடிகளை கவ்வாத்து செய்யும்போது கவ்வாத்து வெட்டுபவர்களுக்கு காயம் ஏற்படும். அத்துடன் வளர்ந்த பிறகு கொழுந்து பறிக்கும் தொழிலாளிகளுக்கு காயங்கள் ஏற்படும். அத்துடன் அதிக எண்ணிக்கையில் மரங்களை வெட்டுவதும் நியாயமற்றது. இதனால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

தொழிற் சங்கங்கள் கம்பெனிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உரிய தீர்வை எடுக்காமல் இருக்கின்றன. இதனால் கடந்த வருடம் பசறையில் ஏற்பட்ட நிலமை இங்கும் ஏற்பட இடமிருக்கிறது.


விற்பனையாகிறது

தாயகம்



20/- 15 Dec. 1999

தேசிய கலை இலக்கியப் பேரவை.

தொடர்பு:
SOUTH ASIAN BOOKS
S-44, 3rd Floor, CCSM Complex,
Colombo 11. Tel: 335844


# தீர்வை எதிர்க்கும் ஜே.வி.பி.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்பதே பெரும்பாலான நாட்டு மக்களின் விருப்பமாக உள்ளது. அதனை உணர்ந்த நிலையிலேயே ஜனாதிபதி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதை நிராகரிக்காது செயல்பட முனைந்து நிற்கிறார். ஒரு சில பேரினவாத யுத்த வெறியர்கள் தவிர்ந்த அரசியல் இட்சிகளும் சமூக சமயத் தலைவர்களும் அத்தகைய பேச்சுவார்த்தை அரசியல் தீர்வை வற்புறுத்தி வருகிறார்கள்.

ஆனால் தன்னை இடதுசாரி சக்தி எனக் கூறிக் கொள்ளும் ஜே.வி.பி. கட்சியினர் புலிகளுடனான பேச்சுவார்த்தையையும் அரசியல் தீர்வையும் நிராகரித்து வருகின்றனர். முன்பும் தீர்வுப் பொதியை நாட்டைப் பிரிக்கும் மரணப் பொதிஎன்றே வர்ணித்து எதிர்த்து வந்தனர். இப்போதும் அந்த நிலையில் இருந்து மாறவே இல்லை. ஜே.வி.பி. யின் உத்தியோகபூர்வ ஏடான 'சீனுவ' சிங்கள இதமிழ் ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. அக் கட்டுரையில், விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் நாட்டின் நக்சலைட் இயக்கத்துடன் இணைந்து வடக்கு கிழக்கைப் பிரித்து தமிழ் நாட்டுடன் இணைத்து தமிழ் இராச்சியம் ஒன்றை அமைக்கவே செயல்பட்டு வருகின்றது. தமிழ் நாட்டில் மேற்படி நக்சலைட் இயக்கம் பலம் பெறும் வரை இங்கு நடைபெறும் போராட்டத்தை நீடித்துச் செல்வதற்கே பேச்சு வார்த்தை அரசியல் தீர்வு எனப் புலிகள் இயக்கம் முயற்சி செய்கிறது. எனவே அத்தகைய புலிகள் இயக்கத்துடன் என்ன கொடுக்கல் வாங்கல் செய்ய உள்ளது. இவ்வாறு ஜே.வி.பி. பத்திரிகை கேள்வி எழுப்பி உள்ளது.

இலங்கையின் ஒரு இடதுசாரி கட்சி எனக் கூறிக் கொள்ளும் ஜே.வி.பி. இவ்வாறு வெட்கம் இன்றிப் பேரினவாத மொழியில் எழுதியிருக்கின்றது. அவர்களுக்கு தேசிய இனப் பிரச்சினையின் அரிச் சுவடி கூட இடதுசாரி நோக்கில் புரிய வில்லை என்பது மட்டுமன்றி இந்தியாவில் நக்சலைட்டுக்கள் என்போர் யார் அவர்களது அரசியல் கொள்கை யாது என்பது பற்றியும் அறியாதவர்களாகவே காணப்படுகின்றனர். இந்தியாவில் அந்நாட்டின் ஆளும் வர்க்கத்தினருக்கு எதிரான மாக்சிச லெனினிசப் போராளிகளைக் கொச்சைப்படுத்தி கொலைகாரர்களாகக் காட்டும் ஒரு குறியீட்டுச் சொல்லாகவே 'நக்சலைட்டுக்கள்' என்று சுட்டப்படுகிறார்கள். ஆனால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அவர்கள் பல முனைப்போராட்டங்ளை நடாத்தி வருகிறார்கள். அவர்கள் மாக்சிச லெனினிசவாதிகளாகத் தம்மை அணி திரட்டி தேசிய இனப் பிரச்சினையில் தெளிவுடன் இருந்து போராடி வருகிறார்கள். இந்தியாவில் எந்தவொரு மாக்சிசலெனினிச இயக்கமும் இலங்கையில் பிரிவினை ஏற்பட வேண்டும் என கொள்கை வைத்தது இல்லை. ஆனால் சுயநிர்ணய உரிமையை இலங்கைத் தமிழர்கள் வென்றெடுக்க வேண்டும் என்றே கூறுகிறார்கள். அதேவேளை புலிகள் இயக்கம் ஒரு மாக்சிச லெனினிச இயக்கம் அல்ல. அவர்களது அடிப்படை தமிழ்த் தேசியவாதமாகும். அத்தமிழ்த் தேசியவாதம் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் மத்தியில் இருந்து எழுவதால் மாக்சிச லெனினிச வாதிகள் ஒடுக்குமுறையை எதிர்த்து ஒடுக்கப்படும் தேசிய இனைத்தின் பக்கத்தில் நிற்பது முற்றிலும் நியாயமானதேயாகும். இதற்கு அப்பால் தமிழ் நாட்டின் மாக்சிச லெனினிசவாதிகளும் புலிகள் இயக்கமும் இணைந்து அகன்ற தமிழ் இராச்சியம் அமைக்க முற்பட்டுள்ளனர் என்ற கூற்று அடிப்படையில் பேரினவாத யுத்தவெறியர்களின் கூச்சலேயாகும்.

புலிகள் இயக்கத்துடன் எவ்வித கொடுக்கல் வால்களும் வேண்டாம் எனக் கூறும் ஜே.வி.பி பேச்சுவார்த்தை அரசியல் தீர்வை எதிர்க்கின்றது என்பதே உண்மையானதாகும். அப்படியானால் யுத்தமே இனப்பிரச்சினையின் தீர்வுக்கு வழி என்பதே அவர்களது நிலைப்பாடாகும். இது தான் அவர்களது இடதுசாரித்தனம். இது தான் அவர்களது சிகப்பு இனவாத சோஷலிசம்.

♦♦♦

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த மக்கள் எழுந்துள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் மாக்சிசத்தையும் சோஷலித்தையும் வீழ்த்தி விட்டதாக உலகளாவிய பிரசாரத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதே வேளை தனது ஏகாதியத்திய திட்டமான பூகோள மயமாதல் மூலம் உலகம் முழுவதிலும் தனது ஆதிக்கம் பரவி வருவதாக கனவு கண்டு வருகிறது. ஆனால் இது வரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட உலகமயமாதல் திட்டங்களால் ஏகபோக முதலாளித்துவம், பல முறைகளிலும் அம்பலமாகி மக்களின் கடும் எதிர்ப்பை பெற்று வருகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக வர்த்தக ஸ்தாபனம் (WTO) மூலம் தனது மூலதன விஸ்தரிப்பை நடாத்தி வருவதுடன் முதலாளித்துவ நாடுகளின் பல்தேசியக் கம்பனிகளுக்கு பரந்த சந்தை வாய்ப்பையும் விரிவு படுத்தி வருகின்றது. கடந்த நவம்பர் 30ம் திகதி முதல் டிசம்பர் 3ம் திகதி வரை அமெரிக்காவின் சீட்டலில் நூறு நாடுகளைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர்களை அழைத்து புத்தாயிரமாம் ஆண்டுக்கான சந்திப்பை நடாத்தியது. ஆனால் தொழிற் சங்கங்களும் சமூகநல பாதுகாப்பு அமைப்புகளும், ஏனைய அரசியல் இயக்கங்களும் இச் சந்திப்பை எதிர்த்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தின. ஒரு கட்டத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் உச்சத்தை அடைந்தன. இறுதியில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அந்தளவிற்கு பூகோள மயமாதல் பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் சந்தை சீர்திருத்தம், போட்டிச் சந்தை முறைமை போன்றவற்றால் உலக நாடுகள் கட்டுப்படுத்தப்படுவதற்கு எதிராக பெரும் எதிர்ப்புகள் காட்டப்பட்டன. அமெரிக்க மண்ணில் இருந்தே அதன் ஏகாதியத்தியக் கொள்கைக்கு கடும் எதிர்ப்பு தொடங்கி இருப்பது புத்தாயிரமாம் ஆண்டிற்கான சிறந்த சமிக்கையேயாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது
PUTHIYA POOMI
சுற்று 07 ஜன/பெப்ரவரி 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 33

## அமெரிக்காவின் உலக மேலாதிக்கக் கனவு

*"சகல விதமான சர்வதேச விவகாரங்களிலும் அமெரிக்கா முக்கிய இடத்தை வகிக்க வேண்டும். அமெரிக்காவை உருவாக்கியவர்களின் கனவை நிறைவேற்றுவதற்கு இதுவே மிக அற்புதமான தருணமாகும். பாரிய கனவுகளைக் காண்பதற்கு அமெரிக்காவிற்கு நம்பிக்கை உள்ளது. 21வது நூற்றாண்டில் அமெரிக்கப் புரட்சிக்கான தருணம் ஏற்பட்டுள்ளது. ரஷியா, சீனா போன்ற நாடுகளுக்கு வழிகாட்ட வேண்டியது அமெரிக்காவின் கடமையாகும்." இவ்வாறு ஜனாதிபதி பில் கிளின்டன் அமெரிக்காவின் இருசபைகளுக்கான வருடாந்த உரையில் குறிப்பிட்டுள்ளார்.*

## களுத்துறைச் சிறை கைதிகளை பூசாவிற்கு மாற்றக் கூடாது

ஜனவரி 6ம் 7ம் திகதிகளில் களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர். இதில் இரண்டு கைதிகள் கடுமையான அடிகாயங்களினால் இறந்துள்ளதுடன் 44 பேர் படுகாயங்களும் அடைந்தனர். திட்டமிட்டு சிறைக் காவலர்களாலும் தண்டனை பெற்ற சிங்களக் கைதிகளாலுமே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. நிராயுத பாணிகளாக சிறைக் கம்பிகளின் பின்னால் அடைத்து வைக்கப்பட்ட நிலையில் கைதிகளைத் தாக்குவதும் கொலை செய்வதும் அநாகரீக மானதும் கோளைத்தனமானதுமாகும். 1983 யூலையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தொடங்கிய இக் கொடூரத் தாக்குதல்களும் கொலைகளும் மீண்டும் மீண்டும் இலங்கையின் சிறைகளில் நடப்பது இயல்பாகி விட்டது. அதிகாரத் திமிரோடும் பேரினவாத வெறியோடும் நடாத்தப்படும் இத் தாக்குதல்களால் சாதிக்கப் போவது எதுவும் இல்லை.

களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் வடக்கு கிழக்கு மலையகத்தைச் சேர்ந்தவர்கள். எழுநூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட இவர்கள் பல வருடங்களாக குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்பட்டு நீதி மன்றங்களின் முன் நிறுத்தப்படாது வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாத தடைச் சட்டம் அவசரகாலச் சட்டம் என்பனவற்றின் கீழ் நீதி விசாரணைக்கு கொண்டுவராமலேயே பல வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலை களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு மட்டும் அல்ல. நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகள் தடுப்பு முகாம்கள் ராணுவத் தளங்கள், பொலீஸ் நிலையங்களில் இருந்து வருகின்றனர். இத்தகையவர்களில் இளம் யுவதிகள் திருமணமான பெண்கள், தாய்மார் அடங்குவர். இவர்கள் அனைவரும் சிறைச்சாலைகளில் கொடுமையாக நடாத்தப்பட்டு வருகின்றனர்.

அண்மையில் களுத்துறைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற தாக்குதல் கொலைகளுக்குப் பின் அங்குள்ள அரசியல் கைதிகளை பூசா சிறைக்கு மாற்ற அரசாங்கம் முயன்று வருகின்றது. இவ்வாறு செய்வது தமிழ் அரசியல் கைதிகளுக்கு இழைக்கப்படும் அநீதி மேல் அநீதியானதாகும். இன்று பெரும்பாலான தமிழ் கைதிகளை அவர்களது பெற்றோர் உறவினர்கள் இங்கு வந்து பார்க்க முடியாத அவலநிலையே இருந்து வருகிறது. மிகவும் கஷ்டங்கள் போக்குவரத்து தடைகளின் மத்தியில் மாதத்தில் அல்லது இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு தடவையே பார்க்க முடிகிறது. ஆனால் பூசா விற்கு மாற்றிவிட்டால் முற்றிலும் இக் கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டு விடும் அபாயமே உள்ளது.

எனவே. எக்காரணம் கொண்டும் தமிழ் அரசியல் கைதிகள் பூசாவிற்கு மாற்றப்படக் கூடாது அதற்குப் பதிலாக அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் இருப்பின் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விசாரணைக்கு எடுத்தல் வேண்டும். அல்லது விடுதலைசெய்யப்படல் வேண்டும். அத்துடன் பெரும் தொகையில் அடைத்துவைக்கப்பட்டுள்ள களுத்துறைச் சிறைச்சாலையின் இனவெறி கொண்ட சிறைக்காவலர்கள் மாற்றப்படல் வேண்டும். தமிழ்ச் சிறைக் காவலர்கள் உட்பட நேர்மையாக நடந்துகொள்ளும் அதிகாரிகள் அங்கு நியமிக்கப்படல் வேண்டும். அதேவேளை 6ம் 7ம் திகதிகளில் இடம் பெற்ற களுத்துறைச் சிறைச்சாலை தாக்குதல் - கொலைகள் பற்றிய பக்கசார்பற்ற விசாரணைக்கான ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்படல் வேண்டும். அதன் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

## தமிழ்க் கட்சிகளின் கவனத்திற்கு

லண்டன் நகரில் ஒருவர் மிருகங்களை செல்லப்பிராணிகளாக வளர்த்து வந்தார். அவர் மிகவும் விரும்பி வளர்த்த மிருகம் சிங்கமாகும் அதனோடு கொஞ்சிக் குலாவியும் வந்தார். சில காலத்திற்குப் பின் மிருகங்கள் வளர்த்த அவரது வீடு மூன்று நாட்களுக்கு மேலாகியும் திறப்படாது பூட்டியிருந்தது. அயலவர்கள் பொலிசிற்கு அறிவித்தனர். வீடு பூட்டுடைத்து திறந்து பார்க்கப்பட்டபோது அந்த மனிதர் சிங்கத்தால் உணவாக்கப்பட்டிருக்கும் தடயங்களே காணப்பட்டன. இது பற்றி தற்போது தீவிர ஆய்வு இடம் பெறுகின்றது. அதாவது சிங்கம் அந்த மனிதரைக் கொன்று சாப்பிட்டதா ? அல்லது அவர் இயல்பாக இறந்து வேளையில் சிங்கம் சாப்பிட்டதா ? எப்படியாயினும் சிங்கத்தோடும் மிருகங்களோடும் கூடிக்குலாவி நட்புடன் வாழ்ந்து வந்த அந்த மனிதனின் கதை முடிந்து விட்டது. இக்கதையை அண்மையில் பத்திரிகையில் வாசித்த போது நமது தமிழ்க் கட்சிகளின் நிலைதான் எண்ணத்தில் தோன்றியது. பேரினவாதக் கட்சிகளோடும் அரசாங்கத்தோடும் கூடிக் குலாவி வரும் தமிழ்க் கடசிகளுக்கு அந்த லண்டன் மனிதனின் முடிவு வந்து விடக் கூடாது.

### பாராளுமன்ற அரசியல்...

1ம் பக்க தொடா

தீர்வுத் திட்டத்திற்கு வாழ்த்திப் புகழ் பாடியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. அது மூலையில் கட்டி வைக்கப்பட்டு விட்டது.

மேற் கூறிய திட்டம் இதயசுத்திகொண்டது என்று எடுத்துக் கொண்டாலும் கூட அந்நான்கு கட்டங்களும் நான்கு பெரும் கண்டங்களைத் தாண்டுவதாகவே இருக்கும். பொதுசன முன்னணிக்குள் இருந்துவரும் பேரினவாதிகளும் யுத்தவாதிகளும் நியாயமான தீர்வுத் திட்டம் உருவாக்குவதை எவ்வாறு உள்ளவாங்கிக் கொள்வார்கள் என்பது பிரச்சினையேயாகும். இருப்பினும் ஜனாதிபதியின் அதிகாரமும் ஆளுமையும் பயன்படத்தப்பட்டாலும் அங்கு பூசல்கள் இருக்கவே செய்யும். அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணங்குவது மிகவும் கடினமானதாகும். தற்போது தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களித்த சூழல் நிர்பந்தத்தாலும், தேர்தல் தந்திரோபாயத்திற்காகவும் தாங்கள் தீர்வுதிட்டமுயற்சிக்கு பூரண ஆதரவு என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறி வருகின்றனர் ஆனால் எந்த நேரத்தில் எந்த முடிவையும் நிலையையும் எடுப்பார்கள். என்று சொல்ல முடியாது. அடிப்படையில் அவர்களது பேரினவாத உள் உறை நோக்கே இறுதி முடிவைத் தீர்மானிப்பதாகும்.

மேலும் தமிழ் கட்சிகள் என்னதான் கம்பத்தில் ஏறினாலும் காசு வாங்க கீழேதான் வர வேண்டும் என்பது போல அரசாங்கத்தின் சுட்டுவிரலைத்தாண்டிப் போக முடியாதவைகள்தான். எனவே அவர்கள் இணங்கினாலும் இணங்காது விட்டாலும் தமிழர் கட்சிகளுடன் பேசினோம். இணங்கினோம் என்ற ஒரு ஒப்புக்குத் தான் இருக்க முடியும். நான்காவது கட்டம் தான் மிகப் பெரும் சிரமமான கட்டமாகும். விடுதலைப் புலிகளுடன் எவ்வாறு பேசி இணங்கிக் கொள் முடியும். எல்லோராலும் ஏற்கப்படட தீர்வுத் திட்டத்தை பார்வையிட்டு சரி சொல்லும் நிலையில் புலிகள் இருக்க மாட்டார்கள். தமிழீழத்திற்கு சமமான மாற்றுத் திட்டம் ஒன்றையே அவர்கள் வற்புறுத்தி வருவதடன் வெளிநாட்டு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தையையே புலிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

அதே வேளை தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகள் அரசியல் தீர்வுத்திட்டம் ஊடாக வழங்கப்படுவதையும் புலிகளுடன் பேசுவதையும் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். இடதுசாரி சோஷலிசம் பேசி வரும் ஜே.வி.பி. யும் இனவாத நிலையில் இருந்து தீர்வை எதிர்த்து வருகின்றது. இவற்றுக்கு எல்லாம் ஜனாதிபதியும் அரசாங்கமும் எந்தளவிற்கு துணிவுடன் முகம் கொடுப்பார்கள்

யாவற்றுக்கும் மேலாக அரசாங்கம் வரையப் போகும் புதிய தீர்வுத்திட்டம் தமிழ் மக்களினதும், முஸ்லீம், மலையகத் தமிழர்களினதும். உரிமைகளையும். அபிலாஷைகளையும் எந்தளவிற்கு பிரதிபலிக்கப் போகின்றது என்பதே பிரச்சினையாகும்.

நாட்டின் யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப் படல் வேண்டும். என்பதில் பேரினவாதிகள் யுத்த வாதிகள் தவிர்ந்த அனைவருக்கும் பெரு விருப்பே இருந்து வருகின்றது. அதற்கான முயற்சி எங்கிருந்து வந்தாலும் வரவேற்க்கப் படுவது தேவையும் அவசியமுமாகும். ஆனால் தீர்வுத்திட்ட முயற்சி என்ற பெயரில் குறுகிய பாராளுமன்ற அரசியல் லாபம் பெறுவதற்கான ஒரு சூதாட்டம் மீண்டும் இடம் பெறுவதை நேர்மையான எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னையகால செயற்பாடுகள் போன்று ஏமாற்று முயற்சியா ? அன்றி நேர்மையான தீர்வுத்திட்ட முன்னெடுப்பா ? என்பதை ஆறுமாத கால இடைவெளி மக்களுக்கு நிரூபித்துக் கொள்ளவே செய்யும். அதுவரை சற்று பொருத்திருந்து அவதானிப்போம்.

## இலங்கை இராஜதந்திரியின் பேரினவாத கண்டுபிடிப்பு

பிரிட்டிஷார் இலங்கைகு வரும்போது தமிழர்கள் வாழ்ந்ததற்கு ஆதாரங்கள் இல்லை. என்று புதுடில்லியிலிருக்கும் இலங்கையின் பிரதிதூதுவர் கூறிகிறார். இது தமிழர்கள் இலங்கையின் பூர்விகக் குடிகளல்லர் என்று பி.பிசி தொலைக்காட்சியில் தோன்றி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க முன்பு கூறியதைவிட மிகவும் மோசமான கூற்றாகும்.

இவ்வாறான கூற்றுக்களினால் அர்த்தமுள்ள அரசியல் தீர்வு காணப்படாது இனப்பிரச்சினை மேலும் சிக்கலாகப் போகிறது. என்பதே உணர்த்தப்படுகிறது. சிங்கள தேசியவாதிகள் என்போரும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்ட எண்ணம் கொண்டுள்ள வர்களும் கூட தமிழ் மக்கள் நீண்ட காலமாக இங்கு வாழ்ந்து வருவதை மறுக்கவில்லை.

இந்திய மக்களும் அரசியல் வாதிகளும் நிபுணர்களும் அதிக அக்கறைக் கொண்டுள்ள இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிப் பேரினவாதிகளான இலங்கையர்கள் இந்திய மக்களையும் அரசியல் வாதிகளையும் நிபுணர்களையும் விழித்துப் பேசும்போது நிதான மில்லாமலும், உண்மைக்கு மாறாகவும் பேசிவருகின்றனர்.

இந்திய அதிகாரிகளும், நிபுணர்களும் மீண்டும் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி வெளிப்படையாக பேசத்தொடங்கி யுள்ளனர். அதில் இந்தியாவின் முன்னாள் வெளியுறவு செயலாளர் ஏ.வி. வெங்கடேஸ்வரன் இந்து பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை மிகவும் முக்கியம்வாய்ந்ததாகும். அவரின் சரியான அணுகு முறையை ஏற்றுக்கொள்ள முடியாத புதுடெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர்ா லயத்தின் பிரதித் தூதுவர் பிரசாத் காரியவசம் எழுதிய பதில் மிகவும். வேடிக்கையாகனதும் விசனத் திற்குரியதுமாகும்

அவரின் நிலைப்பாடு 1796 ஆம் ஆண்டு பிரிட்டிஷார் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் இரண்டு இனங்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இருக்க வில்லை என்பதாகும். இதனால் எங்களது நாட்டின் இராஜதந்திரசேவையில் சரித்திர அறிவற்றவர்கள் இருக்கிறார்களா அல்லது சரித்திரத்தை திரித்து மறுப்பவர்கள் இருக்கிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் பிரிட்டிஷார் இலங்கைக்கு வரும்போது கூட தமிழர்கள் இங்கு வாழவில்லை என்று கூறமுற்படுவது எவ்வளவு முட்டாள்தனமான கூற்றாகும். பொறுப்பாக நடக்கவேண்டிய இராஜதந்திர சேவையிலுள்ளோரின் இவ்வாறான பொறுப்பற்ற கூற்றுக்கள் எமது நாட்டில் இருக்கும் இனமேலாதிக்கத்தை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதற்க்கு ஆதாரமாக அமைகின்றன. இதிலிருந்து சிங்கள பௌத்த பேரினவாதம் எவ்வாறு நிறுவனப்படுத்தப்பட்டதாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதை விளங்கிக்கொள்ள முடியும் அரசில்வாதிகள் மட்டுமல்ல நிர்வாகிகள் அதிகாரிகள் மட்டுமன்றி இராஜதந்திர சேவையிலுள்ளோரும் பேரினவாத நிலைப்பாட்டை பாதுகாப்பதற்காக நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள் என்பது வெளிப்படையாகிறது.

அந்த பிரதித் தூதுவர் சேர் பொன் அருணாசலம், சேர் பொன் இராமநாதன் போன்றோர் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் அல்லர் என்று கூறுவாரோ தெரியாது. இவரின் கூற்று இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் மிகவும் கேலியாக அலசப்படுவது பற்றி அவர் தெரிந்துகொள்வது நல்லது. ஒரு இராஜதந்திரி மட்டத்தில் உள்ள எவருக்கும் குறைந்த பட்ச வரலாற்றறிவு தேவை என்பது பொதுவான தொன்றாகும். ஆனால் பேரினவாதம் அரசோச்சி வரும் இலங்கையின் இராஜதந்திர சேவைக்கு அது தேவை இல்லைப் போலும் பேரினவாந்தி எடுக்கத் தெரிந்தால் மட்டும் போதுமானதாகும். அதையே உதவித் தூதுவர் காரியவசம் டெல்லியில் இருந்து செய்துள்ளார்.

### விற்பனையாகிறது..




### வடக்கு கிழக்கு.....

1ம் பக்கத் தொடர்

அவ்வாறு உரிய அரசியல் தீர்வை கொண்டுவந்த நடைமுறைப்படுத்த அரசாங்கமும் பேரினவாத சக்திகளும் விடாப்பிடியாக மறுத்து விடும் சூழலில் வடக்கு மக்கள் தனிநாடு என்ற நிலைக்கே சென்றடைவர். அதன் ஆரம்ப நடைமுறைகளை அரசாங்கமும், ராணுவமும் இப்போது செயற்படுத்தி வருகின்றமையைத்தான் காண முடிகிறது.

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூ. கே. பிரின்டஸ். 26/1இ சிவானந்தா வீதி, கொழும்பு 13.